Regd. No. 2975.

ஸ்ரீ:

ஸ்ரீ ராமாநுஜன் 177.

P. B. ANNANGARACHARYA, KANCHEEPURAM.

ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சீ. P. B. அண்ணங்கராசாரியர்.

வருடச் சந்தா ரூ. 5 ஜீவியச் சந்தா ரூ. 100.

ஜீவியச் சந்தாதாரர்களுக்கு பத்திரிகை சாச்வதமாக அனுப்பப்பட்டு வருவது தவிர 100 ரூபா விலையுள்ள புத்தகங்கள் உடனே அனுப்பப்படும்.

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி*
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி*—ஏழ்பாரு
முய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம் வாழி*
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

சோபகிருதுஞூ புரட்டாசிமீ 1963ஞூ அக்டோபர்மீ

ஸ்ரீராமாநுஜன் 177.

சென்னை ஸத்க்ரந்தப்ரகாசன ஸபா மூலமாக மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சீ. P. B. அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 15	1963௵ அக்டோபர்மீ சோபகிருது௵ புரட்டாசிமீ	ஸஞ்சிகை 9.

திருவாய்மொழி நூற்றந்தாதி—66.

பாமருவு வேதம் பகர்மால் குணங்களுடன் *
ஆமழகு வேண்டப்பா டாமவற்றை—* தூமனத்தால்
நண்ணி யவனைக்காண நன்குருகிக் கூப்பிட்ட *
அண்ணலை நண்ணாரே ழையர்.

பா மருவு வேதம் பகர்	சந்தங்கள் பொருந்திய வேதங்களால் பேசப்படுகிற	அவனை காண	அப்பெருமானைக் கண்ணாரக் காணவேண்டி
மால்	ஸர்வேச்வரனுடைய	நன்கு உருகி கூப்பிட்ட	நன்றாக உள்ளமுருகி ஓவென்று ஓலமிட்ட
குணங்களுடன்	திருக்குணங்களென்ன	அண்ணலை	ஆழ்வாரை
ஆம் அழகு	நல்ல அழகென்ன	நண்ணார்	அடிபணியாதவர்கள்
வேண்டப்பாடு ஆம் அவற்றை	பெருமேன்மையென்ன ஆகியவைகளை	ஏழையர்	அவிவேகிகளாவர்.
தூ மனத்தால் நண்ணி	மாநஸ ஸாக்ஷாத்காரமாக அநுபவித்து		

***கீழ்த் திருவாய்மொழியாகிய *கற்பாரிராமபிரானில் அநுஸந்திக்கப்பட்ட குணங்களோடுகூட அப்பெருமானது வடிவழகும் பெருமேன்மையும் ஆழ்வாருடைய திருவுள்ளத்திற்கு விஷயமாக, அவற்றோடு கூடின அப்பெருமானைக் கண்ணாரக் காணவேணுமென்னு மாசைகிளர்ந்து கூப்பிட்ட திருவாய்மொழியாம் * பாமருமூவுலகுமென்பது. அங்ஙனம் கூப்பிட்ட ஆழ்வாரை ஆச்ரயியாதவர்கள் அறிவிலிகளான நீசரேயாவர் என்றதாயிற்று. வேண்டப்பாடாவது ஸர்வாதிகத்வம், * பாமரு மூவுலகும் படைத்த * பாமருமூவுலகுமளந்த * இத்யாதிகளால் ஸர்வாதிகத்வமும் * தாமரைக்கண்ணனோ * தாமரைக் கையாவோ * இத்யாதிகளால். அழகும் பேசப்பட்டமை அறிக.

கீழ்த்திருவாய்மொழியாகிய * கற்பாரிராமபிரானில் பரோபதேசம் ஸ்பஷ்டமாக இல்லையாயினும் பரோபதேசத்திலேயே முழு நோக்காயிருக்கும். * கற்பாரிராமபிரானை யல்லால் மற்றுங் கற்பரோ * நாரணற்காளன்றியாவரோ * கண்ணற்காளன்றி யாவரோ * என்று இங்ஙனே பாட்டுத்தோறும் படர்க்கையாகவே அருளிச்செய்திருந்தாலும் முன்னிலையாக அருளிச்செய்வதிலேயே ஆழ்வாருடைய திருவுள்ளம் ஊன்றியிருக்கும். பாவிகாள்! இழந்துபோகிறீர்களே! என்று ஸம்ஸாரிகளை நோக்கிப் பரிதபித்துக் கூறுதலும், அப்படி இழவாதேகொள்ளுங்கள் என்று உபதேசித்தலுமே கீழ்த்திருவாய்மொழிக்கு ப்ரமேயமாயிருக்கும். அங்ஙனே பிறருடைய இழவுக்கு நொந்துபேசின ஆழ்வார் தம்மை நிரூபித்துப் பார்த்தார். பிறர் இழந்திருப்பது நாஸ்திக்யத்தாலே; அப்படிப்பட்ட இழவு தமக்கில்லையா

ஞலும், எம்பெருமானைப் பரிபூர்ணமாக அநுபவிக்கவேணுமென்கிற விருப்பம் தமக்குக் குறையற உண்டாயிருக்கச் செய்தேயும் அவ்வநுபவம் பெருமையினுலேயான இழவு பொறுக்க வொண்ணுதிருந்ததனுல், தம்முடைய ஆர்த்தியெல்லாம் தோற்றப் பரமபத நாதனுடைய திருச்செவியளவும் படும்படியாகப் பெருமிடறு செய்து கூப்பிடுகிருர் * பாமரு மூவுலகு மென்கிற திருவாய்மொழியில் என்றதாயிற்று. .... (66)

—:o:—

ஸ்ரீராமாநுஜன் சந்தா செலுத்தியவர்கள்

109. ஸ்ரீ K. ராமஸ்வாமி ரெட்டியார், Chepauk.
110. A. S. மணிவண்ண முதலியார், Secunderabad.
111. D. Krishnamoorthi, Lakshmeepuram (Madras).
112. V. Ayengar, Bangalore.
113. Vanamamalai Venkatarangacharyar, Bombay.
114. K. S. S. Ramanujam, Calcutta.
115. Shamayyangar, Rajapalayam.
116. V. Srinivasalu Naidu, Adyar, Madras.
117. G. கன்னைய நாயுடு, Choolai, Madras.

ஸ்ரீமந்நிகமாந்ததேசிக மஹோத்ஸவம்.

ஸ்ரீமத்வேதாந்த தேசிகரின் திருவவதாரம் காஞ்சிபுரியில் ஸ்ரீ தீபப்ரகாசன் ஸந்நிதியாகிய திருத்தண்காவின் பரிஸரத்திலாதலால் அத்தலத்தில் திருக்கோலங்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்வாமிக்குப் புரட்டாசித் திருவோணமளவாக 10 நாள் வருஷத் திருநக்ஷத்திரமஹோத்ஸவம் வெகு சிறப்பாக நடந்து தலைக்கட்டிற்று. தினந்தோறும் காலை மாலைகளில் கிழக்கே தேவப்பெருமாள் மாடவீதிகளிலெழுந்தருளி நடைபெறும் இம்மஹோத்ஸவம் இடையில் சிலவாண்டுகளில் ஸாமான்யமாக நடைபெற்று வந்தது. இவ்வாண்டில் ஸ்ரீமான் உ. வே. கந்தாடை. ஸ்ரீராமதாசரதி ஐயங்காருடைய பெருமுயற்சியினுல் வெகு விபவமாக நடைபெற்றது. காலை வேளைகளில் நியமேந திருப்பல்லக்கும், மாலை வேளைகளில் ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வாஹனமுமாக நடைபெற்றது. சாத்துமுறை நன்னாளில் தேவப்பெருமாள் ஸந்நிதிக்கெழுந்தருளி மங்களாசாஸந மஹோத்ஸவமும் வெகு சிறப்பாக நடந்தேறியது. மறுநாள் காலை விளக்கொளியெம்பெருமானேடு கூட கந்தப்பொடிவஸந்த மஹோத்ஸவமும் விலக்ஷணமாக நடந்தது. ... ... *

திருவல்லிக்கேணி வேதவேதாந்தவர்த்திநீஸபை.

தொண்ணூற்றைந்து வருடங்களுக்குமுன்பு பல ஸ்ரீவைஷ்ணவ கனதனவான்களால் திருவல்லிக்கேணியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள வேதவேதாந்த வர்த்திநீஸபையை அறியாதாரில்லை. இந்த ஸபையின் வருஷக்கொண்டாட்டம் ஆவணியில் அல்லது புரட்டாசியில் நடைபெறுவது வழக்கம். இவ்வருஷத்தில் நிகழும் புரட்டாசி மாதத்தில் 25—9—63 முதல் 29—9—63 வரைஐந்துநாள் சிறப்பாக நடைபெற்றது. இது தொண்ணூற்றைந்தாமாண்டுவிழா என்று பரமசந்தோஷத்துடன் தெரிவிக்கிரேம். முந்தின நான்கு நாட்களில் ஸ்ரீவாநமாமலை மடத்தில் வித்வான்களைக்கொண்டு உபந்யாஸங்கள் நடத்திவைக்கப்பட்டன. 29—9—63 ஞாயிற்றுக்கிழமையாகிய ஸமாப்திதினத்தில் ஸ்ரீ பார்த்தஸாரதிஸ்வாமி ஸந்நிதியினுள் கல்யாணமண்டபத்தில் வித்யார்த்திகளுக்கும் வித்வான்களுக்கும் ஸந்மானமளிக்கப்பட்டது டன் உபந்யாஸமும் நடைபெற்றது. ஸ்ரீ உ. வே. (ரிடையர்ட் செஷன் ஜட்ஜ்.) P. M. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியும். ஸ்ரீ உ. வே. அட்வகேட். ஆசால் சேஷாசாரியர் ஸ்வாமியும் பொறுப்புவஹித்து இந்த ஸபையின் காரியங்களை ஒழுங்குபட நிர்வஹித்து வருவது குறிப்பிடத்தக்கது. வாழ்க வாழ்க நீடூழிவாழ்க. .... *

நல்வார்த்தை நானூறு—முன் தொடர்ச்சி.

181. உலகில் பிரசாரத்திலிருந்து வரும் பலவகைப்பட்ட மதங்களுள் பரமபவித்திரமான விசிஷ்டாத்வைத தர்சநம் மிகச்சிறந்து விளங்குகின்றது. ப்ரமாணம், ப்ரமாதா, ப்ரமேயம் என்ற மூன்று வகுப்புகளும் நம் தர்சனத்தில் சீர்மை பெற்று விளங்குவன. திருவாய்மொழியின் உபக்ரமத்தில் * சுடர் மிகு சுருதியென்று ஆழ்வாரால் கொண்டாடப்பட்ட வேதமே நமக்கு ப்ரமாணங்களில் தலையானது. யதார்த்த ஜ்ஞான நிதிகளான ஸ்ரீமந்நாதமுனிகள் ஆளவந்தார் எம்பெருமானர் போல்வாரான மஹாசார்யர்களே ப்ரமாதாக்களில் தலைசிறந்து விளங்குபவர்கள். ஸகல சேதநசரீரகனுய் ஸமஸ்தகல்யாண குணத்மகனுன ஸ்ரீமந் நாராயணனே பரதத்துவமென்றும்; அவனுடைய திருவடித் தாமரைகளில் பண்ணும் ப்ரபத்தியே பரமஹிதமென்றும், * நலமந்தமில்லதோர் நாட்டிலே நித்யாநந்த மயமான நித்ய கைங்கர்யமே பரமபுருஷார்த்தமென்றும் இங்ஙனே கூறப்படும் அர்த்த விசேஷங்களே ப்ரமேய ச்ரேஷ்டங்களாக விளங்குகின்றன. ஆக இத்தகைய ப்ரமாண ப்ரமாத்ரு ப்ரமேய வைசிஷ்ட்யமே நமமுடைய தர்சனத்தின் சிறப்புக்கு ஹேதுவாகா நின்றது.

182. இதிஹாஸ புராணுதிகளான உபப்ரும்ஹணங்களோடும், ஆழ்வாரருளிச் செயல்களோடும் கூடின வேதம் நமக்குப் பரம ப்ரமாணம. பாமவைதிகர்களென்கிற ஏற்றம் நமக்கே உரியது. ப்ரத்யக்ஷத்தாலோ அநுமானத்தாலோ அறிந்துகொள்ள முடியாத அர்த்த விசேஷங்களை யறிவிக்கும் வாங்மயமே வேதமெனப்படும். *ப்ரத்யக்ஷேணுநுமித்யா வா யஸ் தூபாயோ ந புத்யதே, யத் தம் விதந்தி வேதேந தஸ்மாத் வேதஸ்ய வேதிதா * என்கிற ப்ரமாணம் இங்கே அநுஸந்தேயம். வேதத்தை ப்ரமாணமாக இசையாத சார்வாக ஜைந பௌத்தாதிகள் பாஹ்யர்களெனப்படுவர். வேதத்தைப் பரம ப்ரமாணமாக இசைந்து வைத்தும், பரப்ரஹ்மம் குணசூந்யமென்றும் அலக்ஷ்மீகமென்றும் விபூதிவிரஹிதமென்றும் இங்ஙனே மனம்போனபடியெல்லாம் பேசுபவர்கள் குத்ருஷ்டிகளெனப்படுவர்கள். பாஹ்யர்களோடு குத்ருஷ்டிகளோடு ஒருவாசியில்லை யென்றருளிச் செய்கிருர் கூரத்தாழ்வான். ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில் * பாஹ்யா: குத்ருஷ்டய இதி த்விதயேப்யபாரம் கோரம் தமஸ் ஸமுபயாந்தி ந ஹீக்ஷஸே தாந், ஜக்தஸ்ய காநநம்ருகைர் ம்ருகத்ருஷ்ணிகேப்ஸோ: காஸாரஸத்வகிஹதஸ்ய ச கோ விசேஷ:?* என்றுள்ள ச்லோகம் இங்கே காண்க. பாஹ்யர்களும் குத்ருஷ்டிகளும் துல்யோக க்ஷேபர்களென்பதற்கு அற்புதமான த்ருஷ்டாந்தம் காட்டுகிருரிதில்; விடாய் மிகுத்துத் தண்ணீரைத் தேடியோட இரண்டு மிருகங்கள் புறப்பட்டன. அவற்றில் ஒரு மிருகமானது தடாகத்தில் புகாதே கானலைக்கண்டு பாநீயப்ரவாஹமாக மயங்கி ஓடிக்கொண்டேயிருக்கையில் புலியின் வாயிலே விழுந்து மாண்டொழிந்தது. இது இப்படியாக, மற்றொரு மிருகமானது விடாய்தீரப் பெறுவதற்கு உண்மையாகத் தண்ணீருள்ள தடாகத்திலேயே சென்று சேர்ந்தும் துறைகப்பியிழிபவே அங்குக் கிடந்த வொரு முதலையினுலே கதுவப்பட்டு மாண்டொழிந்தது. ஆக இரண்டு மிருகங்களும் தடாக ப்ரவேஶ அப்ரவேஶங்களாலே சிறிது வைலக்ஷண்யம் பெற்றிருந்தாலும் விநாசத்தில் துல்யபலமே, அதுபோலவே குத்ருஷ்டிகளும் பாஹ்யர்களும் வேதப்ராமாண்ய அங்கீகார அநங்கீகாரங்களாலே சிறிது வாசிபெற்றிருந்தாலும் விநாசத்திலே வாசியற்றவர்களே யென்றதாயிற்று. அந்த பாஹ்யர்களும் குத்ருஷ்டிகளும் கிடக்கட்டும். வேதக் கடலில் நாம் உள்ளபடி அவகாஹித்து அர்த்த ரத்னங்களைக்கொண்டு அனுபவித்து ஆனந்திக்கக்கடவோம்.

1:3. வேதம் கர்மகாண்ட மென்றும் ப்ரஹ்மகாண்ட மென்றும் இரு வகுப்பாகவுள்ளது. பூர்வபாகம் கர்மகாண்டமென்றும். உத்தரபாகம் ப்ரஹ்மகாண்டமென்றும் வழங்கப்

படும். உபநிஷத்துக்களையே ப்ரஹ்மகாண்ட மென்பது. பகவானுக்கு ஆராதனரூபங்களான யஜ்ஞம் முதலிய கரும விசேஷங்களை விரிவாகக் கூறும் வேதபாகம் கர்மகாண்டமென்றும், அக்கருமங்களினால் ஆராதிக்கப்படுகின்ற பகவானுடைய ஸ்வரூப ரூபகுணங்களை விரிவாகக் கூறும் வேதபாகம் ப்ரஹ்மகாண்ட மென்றும் சொல்லிற்றாயிற்று. இதுவே உபநிஷத்தென்கிற பெயராலும் வழங்கும். 'உப-நிஷீததி.' என்கிற வ்யுத்பத்தி கொண்டது உபநிஷத்தென்கிற பதம். பகவானுடைய அருகேயுள்ளதென்கை. *வேதைச் ச ஸர்வைரஹமேவ வேத்ய:* என்கிற கீதையின்படி கர்மகாண்டமுங்கூட பகவானை ப்ரதிபாதிக்கவல்லதேயாயினும் அந்த ப்ரதிபாதனம் வ்யவஹிதமாயிருக்கும். உபநிஷத்து அவ்யவதாநேந ப்ரதிபாதகமாயிருக்கும்.

184. கர்மகாண்டத்தில் தோன்றும் ஶங்கைகளைப் பரிஹரிப்பதற்காக ஜைமிநியென்னும் மஹர்ஷியெழுந்து பதினாறு அத்யாயங்களோடு கூடிய ஒரு சாஸ்த்ரத்தை யியற்றினார். அதற்குப் பூர்வமீமாம்ஸையென்று பெயர். இதில் பன்னிரண்டு அச்யாயங்களே ஜைமினியால் இயற்றப்பட்டவையென்றும், மேல் நான்கு அத்யாயங்கள் காஶக்ருத்ஸ்ந மஹர்ஷியால் இயற்றப்பட்டவை யென்றும் ஒரு பக்ஷமுண்டு. இதைப்பற்றி இங்கு விசாரவிரிவு வேண்டா. * வ்ருத்திக்ரந்தே து ஜைமிந்யுபரசிததயா ஷோடஶாத்யாய்யுபாத்தா * இத்யாதியான அதிகரண ஸாராவளிச்லோகம் காண்க. "ஜைமிநீயம் ஷோடஶலக்ஷணம்" என்பது பொதுவான வார்த்தை. போதாயந வ்ருத்திக்ரந்தத்தில் பதினாறு அத்யாயங்களும் ஜைமினிப்ரோக்தமென்று கூறப்பட்டுள்ளது. (லக்ஷணமென்று அத்யாயத்திற்குப் பெயர்.) ப்ரஹ்மகாண்டமென்னும் உபநிஷத் பாகத்தில் தோன்றும் சங்கைகளைப் பரிஹரிப்பதற்காக வ்யாஸமஹர்ஷி யெழுந்து நான்கு அத்யாயங்கள் கொண்ட வொரு ஶாஸ்த்ரத்தை இயற்றினார். அதற்கே ஶாரீரகமீமாம்ஸை யென்று பெயர். உத்தரமீமாம்ஸை யென்றும் வழங்குவர். ப்ரஹ்மஸூத்ரமென்பது இதனையே. ஒவ்வோரத்யாயத்திலும் நான்கு பாதங்களுள்ளன. ஆகவே பதினாறு பாதங்கள் கொண்டது ஶாரீரகமீமாம்ஸை யென்றதாயிற்று. இதில் ஒவ்வொரு விஷயத்தைப்பற்றி சர்ச்சை செய்து நிர்ணயிக்கும் பகுதிக்கு அதிகரணமென்று பெயரிடப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட அதிகரணங்கள் இந்த மீமாம்ஸையில் (156) நூற்றைம்பத்தாறு உள்ளன. சில அதிகரணங்களில் ஒரே ஸூத்ரமிருக்கும். பல அதிகரணங்களில் பல ஸூத்ரங்களிருக்கும். மொத்தம் ஸூத்ரங்களின் லக்கம் (545) ஐந்நூற்று நாற்பத்தைந்து என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. ஆக, நான்கு அத்யாயங்களையும், பதினாறுபாதங்களையும் நூற்றைம்பத்தாறு அதிகரணங்களையும் ஐந்நூற்று நாற்பதைந்து ஸூத்ரங்களையுங் கொண்டது ப்ரஹ்மஸூத்ர சாஸ்த்ரமென்றதாயிற்று.

185. தத்வஹித புருஷார்த்தங்களை நாம் தெரிந்துகொள்வதற்கு உபநிஷத்துக்களே தஞ்சமாகும். அவ்வுபநிஷத்துக்களின் பொருள்களை ஸம்ஶய விபர்யயமற நிஷ்கர்ஷித்து விளக்கக்கூடியது இந்த ப்ரஹ்மஸூத்ர ஶாஸ்த்ரமேயாதலால் வேதாந்திகளுக்கு இதுவே புகலாயிற்று. இந்த ஶாஸ்த்ரத்தின் பொருளை நிஷ்கர்ஷமாகவும் நிஷ்கல்மஷமாகவும் தெரிந்துகொண்டவர்களே வேதாந்திகளென்றும் ப்ரஹ்மஜ்ஞானிகளென்றும் சொல்லத் தகுதியுடையார். மஹர்ஷிகளியற்றிய ஸூத்ரங்களின் பொருளை நம்போல்வார் சிறிதும் அறியகில்லார்களாதலால், நம்போன்ற அல்பமதிகளிடத்தில் பரமகருணைகொண்ட பூருவர்கள் அந்த ஸூத்ரங்களின் அர்த்தத்தை விளக்கி பாஷ்யங்கள் இயற்றியுள்ளார்கள். த்வைதம் அத்வைதம் விசிஷ்டாத்வைதம் என மூன்று மதங்கள் உலக ப்ரஸித்தமாக வழங்குமவை.

சேலமாநகரில் P. B. A. ஸ்வாமிக்குப் பொன்னுடை போர்த்தல் (ஸ்ரீசங்கரமடம்)—7–8–63



இம் மூன்று மதங்களிலும் பாஷ்யங்கள் அவதரித்துள்ளன. அத்வைத மதத்திற்காக ஶங்கராசாரிய ஸ்வாமிகள் பாஷ்யமியற்றினார். த்வைத மதத்திற்காக ஆனந்த தீர்த்தஸ்வாமிகள் (மத்வாசார்) பாஷ்யமியற்றினார். நமது விசிஷ்டாத்வைத மதத்திற்காக பகவத்ராமாநுஜாசார்யரென்கிற ஸ்வாமி யெம்பெருமானார் ஸ்ரீபாஷ்யமருளிச் செய்தார். வட இந்தியாவில் அதிக ப்ரஸித்திபெற்றுள்ள வல்லப மதம் நிம்பார்க்க மதம முதலிய மதங்களுக்காகவும் பாஷ்யங்கள் தோன்றியுள்ளன. சைவ மதத்திற்காக நீலகண்ட பாஷ்யம் தோன்றியுள்ளது. இப்படி மற்றும் பல பாஷ்யங்களிருந்தாலும் மதத்ரயபாஷ்ய மென்று மூன்று பாஷ்யங்களே நமது நாட்டில் குலாவப்படுகின்றன. ஸ்ரீவைஷ்ணவர்களென்றும் விசிஷ்டாத்வைதிகளென்றும் பகவத்ராமாநுஜ தர்சநஸ்தர்களென்றும் வழங்கப்படுகின்ற நமக்கு ஸ்வாமியின் ஸ்ரீபாஷ்யமே ஜீவாதுவாகும். ஶங்கரபாஷ்யம் மத்வபாஷ்யம் நீலகண்டபாஷ்யம் என்பவைபோலல்லாமல் ஸ்ரீபாஷ்யமென்றே தோன்றியுள்ள ப்ரஸித்தி இதன் ஒப்பற்ற பெருமையைப் புலப்படுததுமென்று விமதர்களும் எழுதி வைத்திருக்கின்றார்கள்.

186. உபநிஷத்துக்களின் உண்மைப் பொருளை விளக்கி ஸூத்ரகாருடைய உள்ளத்திற்கு ஒத்ததாக நிஷ்பக்ஷபாதமாய் நிரூபிக்கப்பட்டது ஸ்ரீபாஷ்யமேயென்று மேனாட்டுப் புலவர்களும் மெச்சியுள்ளார்கள். அதுநிற்க; ஸ்வாமி ஸ்ரீபாஷ்யமருளிச் செய்யத் தொடங்கும் போதே "பகவத்போதாயநக்ருதாம் விஸ்தீர்ணாம் ப்ரஹ்மஸூத்ரவ்ருத்திம் பூர்வாசார்யாஸ் ஸஞ்சிக்ஷிபு:; தந்மதாநுஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யாக்க்யாஸ்யந்தே" என்று [முன்னோர் மொழிந்த முறை தப்பாமே வியாக்யானிப்பதாக] அருளிச் செய்திருப்பதனால்

ஸ்ரீகாஞ்சீ P. B. A. ஸ்வாமிகளின் உபந்யாஸ கோஷ்டி, சேலம்.
வாஸவி மஹால், 1963ஞூ ஆகஸ்டுமீ 8, 9 தேதிகள்.



ஸ்ரீபாஷ்யத்தின் ப்ராமாணிகத்வம் அசைக்கமுடியாது விளங்குகின்றது. இக்காலத்து அஸூயுக்கள் சிலர் மேலே உதாஹரித்த பங்க்தியின் மேல் வீணை விவாதத்தைக் கிளப்பி ஹம்ஹமடைந்துபோனார்களென்பது நம்முடைய சதபூஷணீவஜ்ரகுடார—தத்விஜயத்வஜ—ஶாங்கர ஶிரோபூஷா—தத்விபூஷணதிக்ரந்தங்களினால் விசதமாதலால் அதனை ஈண்டு விவரித்துரைக்கின்றிலோம். ஆர்ஷவ்யாக்யாநகவசிதமாயும் அதிப்ராசீநமாயும் பரமபவித்ரமாயுமுள்ளது விசிஷ்டாத்வைதமேயென்றும், அதை நிலைநாட்டவல்ல பாஷ்யம் ஸ்ரீபாஷ்யமேயென்றும் ப்ராமாணிக வைதிகோத்தமர்களின் கொள்கை.

187. விசிஷ்டாத்வைத ஸித்தாந்த மென்னுஞ் சொல்லுக்குப் பொருள் விவரிக்கப்படுகிறது. ஸித்தாந்த மென்பதற்கு ப்ராமாணிகமாகப் பரிக்ரஹிக்கப்பட்ட அர்த்தமென்று தேர்ந்த பொருள். மதம் என்றவாறு. இரண்டாயிருக்கும்தன்மை த்விதா எனப்படும். த்வைத மென்றாலும் அதுவே பொருள். பேதம் என்றதாயிற்று. அத்தோடு (நஞ்) சேர்ந்தால் அத்வைதம் என்றாகிறது. அபேதமென்று பொருள். விசிஷ்டஸ்ய அத்வைதம்—விசிஷ்டாத்வைதம். ஸமஸ்தசேதநாசேதநவஸ்துக்களோடு கூடின ப்ரஹ்மம் ஒன்று என்று அங்கீகரிக்கப்படுவதால் இந்த தரிசனம் விஶிஷ்டாத்வைதமெனப்படுகிறது. சித்தும் அசித்துமாகிய இரண்டு தத்துவங்கள் உண்மையில் கிடையவே கிடையாதென்றும் ப்ரஹ்மமொன்றே உள்ளதென்றும் கொள்ளுகின்ற பிறருடைய மதத்தைத் தள்ளி, மூன்று தத்துவங்களும் உண்மையாகவுள்ளனவென்று கொள்ளுவதே இந்த தரிசனத்தில் ஸாரமானது.

188. ‘விசிஷ்டஸ்ய அத்வைதம்—விசிஷ்டாத்வைதம்’ என்று கொள்ளுகையன்றிக்கே, ‘விசிஷ்டம் ச விசிஷ்டம் ச விசிஷ்டே; விசிஷ்டயோ: அத்வைதம் — விசிஷ்டாத்

வைதம்' என்று கொண்டு ஸூக்ஷ்ம சிதசித்விசிஷ்ட ப்ரஹ்மத்திற்கும் ஸ்தூல சிதசித் விசிஷ்டப்ரஹ்மத்திற்கும் ஐக்கியம் கொள்ளுகை விசிஷ்டாத்வைதம்—என்பாருமுளர். இதில் உபபத்தி காண்பதரிது. விசிஷ்டஸ்ய அத்வைதமென்பதே உபபந்நமாகும். 'ப்ரஹ்ம மொன்றே ஸத்யமானது; மற்றவையெல்லாம் மித்யை' என்று சொல்லுகிற அத்வைதிகள் ப்ரஹ்மத்தினிடத்தில் சிதசித் விசிஷ்டத்வத்தை ஒப்புக்கொள்ளுவதில்லை. ப்ரஹ்மம் போலவே ஜகத்தும் ஸத்யமேயென்று அங்கீகரிக்கிற த்வைதிகளும் [மாத்வர்களும்] சேதநா சேதநங்களுக்கும் ப்ரஹ்மத்திற்குப் ரக்ஷ்யரக்ஷகபாவ ரூபமான ஸம்பந்தம் தவிர ஐக்யவ்யப தேசத்திற்குரிய ஸம்பந்த விசேஷமொன்றும் அங்கீகரிக்கின்றிலர். ஆகவே அவர்களும் ப்ரஹ்மத்தினிடத்தில் சிதசித்வைசிஷ்ட்யத்தை ஏற்றுக்கொள்வதில்லை யென்பது தேறிற்று. நமது ஸித்தாந்தத்திலோவென்னில், சேதநாசேதநாத்மகமான ப்ரபஞ்சத்தையும் ப்ரஹ்மத்தையும் ஸத்யமென்று கொள்வதோடு அவற்றுக்கு ஐக்யவ்யபதேசத்தை நிர்வஹிக்கக் கூடியதான சரீர சரீரிபாவரூபமான ஸம்பந்த விசேஷத்தையும் கொள்வதனாலே, உலகத்தில் உடலுக்கும் உயிருக்கும் வேற்றுமை அபலபிக்க முடியாததாயிருக்கச் செய்தேயும் "சைத்ர: ஏக:" என்கிற வியவஹாரம் எப்படி காணப்படுகிறதோ அப்படியே இங்கும் சேதநாசேதந சரீரகமான ப்ரஹ்மத்திற்கு ஏகத்வேந வ்யபதேசமும் பரஸ்பரம் ஸ்வரூபபேதமும் பொருந்தக் குறையில்லை. இவ்வர்த்தத்தத்துவத்தைக் காட்டவல்லதான 'விசிஷ்டஸ்ய அத்வைதம்-விசிஷ்டாத்வைதம் என்னும் வ்யுத்பத்தியே யுக்தமானதென்று கொள்க.

189. ச்ருதிவாக்யங்களை யுற்று நோக்கினுல் அவற்றில் இருவகையான பாகுபாடு காணப்படும். (1) பேதத்தையே காட்டும் சில வாக்யங்கள். (2) அபேதத்தையே காட்டும் சில வாக்யங்கள். * க்ஷரம் ப்ரதாநம் அம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீசதே தேவ ஏக: * *ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீசநீசௌ* என்பது முதலான ச்ருதி வாக்யங்கள் சேதந—அசேதந—ஈச்வரரூப தத்வத்ரயத்தின் உண்மையைத் தெரிவிக்கும் முகத்தால்பேதத்தைக் காட்டுகின்றன. *நேஹ நாநாஸ்தி கிஞ்சந* * ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம* தத் த்வமஸி* இத்யாதிகளான ச்ருதி வாக்யங்கள் பலவகைப்பட்ட வஸ்துக்களில்லாமையைத் தெரிவிக்கும் முகத்தால் அபேதத்தைக் காட்டுகின்றன. ஆக ச்ருதிகளில் சிலவிடத்து பேதப்ரதிபாதநமும் சிலவிடத்து அபேத ப்ரதிபாதநமுமிருப்பதாகத் தேறுகையாலே பரஸ்பர விரோதம் ஸ்பஷ்டமாகிறது. விருத்தமான அர்த்தத்தைத் தெரிவிக்கையாகிற அவத்யம் ச்ருதிகளில் இடம் பெறத்தகாது. விரோதமோ உள்ளதென்று காட்டியாயிற்று. விரோதத்தைப் போக்கி ஸமந்வயம் காட்ட வேண்டிய பொறுப்பு விமர்சகுசலர்களான வைதிகர்களுக்குள்ளது. ப்ரஹ்மமொன்றுதான் ஸத்யமென்று கொள்ளுகிற அத்வைதிகள் அபேதத்தைக் காட்டும் ச்ருதிவாக்யங்களை மட்டும் முக்கியமாகப் பரிக்ரஹித்து பேதத்தைக் காட்டும் ச்ருதிவாக்யங்களை உபேக்ஷித்து விட்டார்கள். த்வைதிகளோவென்னில் பேதத்தைக் காட்டும் ச்ருதி வாக்யங்களை மட்டும் முக்கியமாகப் பரிக்ரஹித்து அபேதத்தைக் காட்டும் ச்ருதி வாக்யங்களை உபேக்ஷித்துவிட்டார்கள்.

190. *யஸ்யாத்மா சரீரம், யஸ்ய ப்ருதிவீ சரீரம். ய ஆத்மநி திஷ்டந்* இத்யாதி வாக்யங்கள் பகவான் ப்ருதிவிமுதல் ஆத்மாவரையிலுமுள்ள ஸகல வஸ்துக்களிலும் அந்தர்யாமியாயிருக்கிறானென்பதை ப்ரதிபாதிக்கின்றன; இவற்றை த்வைதிகளும் அத்வைதிகளுமான இரு வகுப்பினரும் அறவே விட்டிட்டார்கள். ஸுபாலோபநிஷத்து முதலான அந்தர்யாமி ப்ராஹ்மணவாக்யங்களுக்கு உபய மதத்திலும் ஆதரவு கிடையாதென்பது ஸ்பஷ்டம். ஆக, த்வைதாத்வைத மதங்களிரண்டிலும் அநேக ச்ருதி வாக்யங்களை அமுக்யார்த்தங்

களாகக் கொள்ளுகல் உபேக்ஷித்தல் இத்யாதியான பலீயஸ்ஸான தோஷமுள்ளது. இத்தகைய தோஷம் சிறிதும் தட்டப்பெறுதது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமொன்றே.

191. பேத—அபேத—கடகச்ருதிகளான மூன்று வகுப்பான ச்ருதிவாக்யங்களையும் ஒரு நிகராக ஆதரிப்பவர்கள் விசிஷ்டாத்வைதிகளேயாவர். ஒரு ச்ருதிவாக்யத்திலும் அமுக்யார்த்த கல்பனை யென்பதுகிடையாது. எங்ஙனேயென்னில், கடைசியாக எடுத்துக்காட்டப்பட்ட *யஸ்யாத்மா ஶரீரமித்யாதிகளான ச்ருதி வாக்யங்களுக்கு கடக ச்ருதிகளென்றன்றோ பெயர். பேதத்தையும் அபேதத்தையும் விரோத லேஶமுமின்றிக்கே ஸம்நவயப்படுத்திக் கொடுக்கிற *யஸ்ய ப்ருதிவீ சரீர மித்யாதிகளான ச்ருதிவாக்யங்களுச்கு கடகச்ருதிகளென்னும் பெயர் மிகப் பொருத்தமானது. *நேஹ நாநாஸ்தி கிஞ்சந* இத்யாதிகளான அத்வைத (அபேத) ச்ருதிகளினுலேற்பட்ட அபேதத்தையும் *க்ஷரம் ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹர:* இத்யாதிகளான த்வைத (பேத) ச்ருதிகளினுலேற்பட்ட பேதத்தையும் பொருந்தவிடும் வழி கேண்மின். சேதநாசேதந ஈச்வரர்களான மூன்று தத்துவப் பொருள்களின் ஸ்வரூபபேதம் உண்மையாதலால் *க்ஷரம் ப்ரதாநமித்யாதி பேத ச்ருதியானது பேதத்தைச் சொல்லியிருப்பது பாங்கே. ப்ரஹ்மம் சேதநாசேதந விசிஷ்டமாய்க்கொண்டு ஒன்றேயாகிறபடியால் *ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம* இத்யாதியான அபேத ச்ருதிகளும் பொருந்தக் குறையில்லை. *யஸ்யாத்மா சரீரமித்யாதி அந்தர்யாமி ப்ராஹ்மண ச்ருதிகளானவை ஸர்வேச்வரனே ஸர்வாந்தர்யாமி யென்று தெரிவிக்கும் முகத்தால் பேதத்தையும் அபேதத்தையும் பொருந்த விடுகின்றன.

192. ஆத்மாவும் ஶரீரமும் ஒன்றல்ல, வெவ்வேறுபட்டவை. சரீரத்தில் அவயவங்களும் பலபல. ஆக அநேக வஸ்துக்களிருக்கச் செய்தேயும் ஏகத்வவ்யுவஹாரம் நிகழ்ந்து வருவது ஶரீர விசிஷ்டனை ஶரீரி ஒருவன்' என்னுமபிஸந்தியாலத்தனையன்றோ. இவ்வண்ணமாகவே 'ப்ரஹ்ம ஏகமேவ' என்ற ச்ருதியும் விஶிஷ்டைக்யத்தைச் சொல்லுவதாகக் கொள்ளக்குறையில்லையே. ஏவஞ்ச, பேதத்திற்கும் அபேதத்திற்கும் அபாயமொன்றுமில்லை யென்றதாயிற்று. ஶரீரங்களும் ஶரீரிகளுமாகிற நாநாவஸ்து ஸத்பாவம் ப்ராமாணிகமாகையாலே அபலபிக்க வொண்ணுதகே. இங்ஙனே விஶிஷ்டைக்யமும் அநுபவஸித்தமாகையாலே அபலபிக்க வொண்ணுதகே. ஆக, உண்மையில் வெவ்வேறுபட்ட வஸ்துக்களும் ஶரீர ஶரீரி ஸாவஸம்பந்தமாகவே ஒன்ருக வழங்கப்படுவதாய் ஸித்திக்கையாலே அப்படிப்பட்ட ஶரீர ஶரீரி ஸாவத்தையுணர்த்துகின்ற அந்தர்யாமி ப்ராஹ்மணுதி ரூபங்களான ச்ருதி வாக்யங்களுக்கு விசிஷ்டாத்வைத மதத்தில் மிகுந்த கௌரவமுள்ளது. அத்வைதிகள் பேதச்ருதிகளை அநாதரிப்பது போலவும், த்வைதிகள் அபேதச்ருதிகளை அநாதரிப்பதுபோலவும் நாம் ஒரு வகை ச்ருதியிலும் அநாதரம் காட்டுகின்றிலோம். ஆகவே ஸர்வச்ருதிஸாமரஸ்யம் நமக்கேயொழியப் பிறர்க்கில்லை யென்பது கல்வெட்டாகத் தேறி நின்றது.

193. மதாந்தரஸ்தர்கள் ஒப்புக்கொள்ளாத பல அர்த்தங்களை நாம் ஒப்புக்கொண்டிருக்கின்றோம்; நித்யஸூரிஸத்பாவம், எம்பெருமானுடைய கல்யாணகுணாகரத்வம், திவ்ய மங்கள விக்ரஹ விசிஷ்டத்வம் முதலானவை அவை; இவற்றையெல்லாம் விட்டு சரீர சரீரிபாவத்தையே கொண்டு விசிஷ்டாத்வைதமென்று பெயரிடுவதில் என்ன விசேஷமென்னில், கேண்மின். ஸித்தாந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்ற அர்த்த விசேஷங்களுள் ஜகச்சரீரகத்வ மென்பதே ப்ரதாநமானது. ஆனதுபற்றியே இது ப்ரதாந ப்ரதிதந்த்ரார்த்த

மெனப்படுகிறது. இதுவே ப்ரதாநமென்பது எங்ஙனமென்னில்; ஸர்வ ச்ருதிகளினுடைய வும் முக்கியமான அர்த்தத்தைத் தெரிவிப்பதாய், ஸர்வச்ருதிகளுக்கும் ஸாமரஸ்யத்தை நிர்வஹித்து வாதிவிஜய ப்ரயோஜகமாயிருப்பதனுலே இதற்கு ப்ராதாந்ய மென்றுணர்க. இந்த ஶரீராத்ம பாவத்தைத் தெரிந்துகொள்ளாமையினலன்றோ பிறமதத்தவர்கள் ஸர்வ ச்ருதிஸாமஞ்ஸ்யத்தை நிர்வஹிக்கமாட்டாமல் தள்ளுகின்றார்கள். குத்ருஷ்டிகளின் குசோத்யங்களை அவலீலயா பரிஹரித்துத் தருவது இந்த ஶரீராத்மபாவமே யென்க. இந்த ப்ரயோக ப்ரதிதந்த்ரார்த்தத்தை நன்கு தெரிந்துகொண்ட வொரு வ்யக்தி நிற்குமிடத்தில் விபதர்கள் எத்தனை பேர்கள் கூடி எவ்வளவு வாதகோலாஹலங்கள் செய்தாலும் அவர்களுக்கு பங்கமே தவிர வேறில்லையென்று மருமமறிந்த மஹாசார்யர்கள் திடமாகக் கூறுகின்றார்கள்.

194. ஸித்தாந்தத்தில் உயிரான ஶரீராத்ம பாவமே ப்ரஹ்மஸூத்ரகாரருக்கும் அபிமதம். இவ்விஷயத்தில் ஶாரீரக மீமாம்ஸை முழுவதுமே ப்ரமாணமாகக் காட்டக் கூடியதாயினும் வ்யுத்பித்ஸுக்களின் புத்தியில் ஏறுவதற்காக ஸம்க்ஷேபமாய் நிரூபித்தல் நலமென்று கருதி, அந்த ஶாரீரகமீமாம்ஸையில் ஒரு அதிகரணத்தைமட்டும் ஈண்டெடுத்துக் காட்டி ப்ராமாணிகர்களின் மனத்தில் பதியவைக்கிறோம். அதில் முதலத்யாயம் நான்காவது பாதத்தில் வாக்யாந்வயாதிகரண மென்பது ப்ரஸித்தமானது. நான்கு ஸூத்ரங்கள் கொண்டது இவ்வதிகரணம். ப்ருஹதாரண்யகத்தில் ப்ரஸித்தமான மைத்ரேயீ ப்ராஹ்மண மென்னும் பகுதியில் அம்ருதத்வோபாயமேதென்று கேட்ட மைத்ரேயியைக் குறித்து யாஜ்ஞவல்க்யருடைய விடை *ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய:* என்பது. இதில் ஆத்மா என்னும் ஶப்தத்தால் குறிக்கப்பட்டவன் பரமாத்மாவா? ஜீவாத்மாவா? என்று விசாரம் ப்ரஸக்தமாக, பரமாத்மாவே யென்று நிர்ணயம் செய்வது இவ்வதிகரணத்தின் பிரமேயம். இது * வாக்யாந்வயாத் * என்கிற முதல் ஸூத்ரத்தினல் தேறியது. மைத்ரேயீ ப்ராஹ்மணத்திலுள்ள மஹாவாக்யம் ஸமஞ்ஜஸமாக அந்வயிக்க வேண்டுகையாலே அந்த வாக்யத்தில் பிரதிபாதிக்கப்பட்ட ஆத்மா கரும பலன்களை யநுபவிப்பவனை ஜீவாத்மாவாக இருக்க முடியாது; பரம புருஷனேயாக வடுக்கும்—என்று சொல்லப்பட்டதாயிற்று. இதற்குமேல் ஒரு கேள்வி எழுந்தது; அதாவது, இங்குப் பரமாத்மா விவக்ஷிதனுகில் ஜீவாத்ம வாசகமான ஆத்மா என்கிற ஶப்தத்தை ப்ரயோகிப்பானேன்? பரமாத்மாவென்றே ப்ரயோகிக்கலாகாதா? என்று. இக் கேள்விக்கு ஸூத்ரகாரரால் பேலே மூன்று ஸூத்ரங்களினல் ஸமாதானம் தெரிவிக்கப் பட்டுள்ளது. அடைவே ஆச்மரத்ய மதம், ஔடுலோமி மதம், காஶக்ருத்ஸ்நமதம் என மூவருடைய மதம் காட்டப்பட்டுள்ளது. முறையே ஸூத்ரங்கள் (1) ப்ரதிஜ்ஞாஸித்தேர்லிங்கமாச்மரத்ய:. (2) உத்க்ரமிஷ்யத ஏவம்பாவாதித்யௌடுலோமி:. (3) அவஸ்திதேரிதி காஶக்ருத்ஸ்ந: என்பன.

195. ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு கார்யகாரண பாவம் ச்ருதியில் சொல்லப் பட்டிருக்கையாலே அதனல் அவர்களுக்கு அபேதம் ஏற்படுகிறது. அதைத் தெரிவிப்பதற்காகப் பரமாத்ம ஜீவாத்மாக்களுக்கு ஐக்யோக்தியுள்ளதென்று ஆச்மரத்ய மதம். கீழே காட்டிய ஆச்மரத்ய மதத்தில் ஜீவாத்மாவுக்குப் பரமாத்மாவினிடமிருந்து உத்பத்தியைக் கொள்ளுகையாலே *ந ஜாயதே ம்ரியதே வா விபஶ்சித்* இத்யாதி ப்ரமாணங்களோடு அது விரோதிக்கையாலும் மற்றும் அநேக தோஷ ப்ரஸங்கத்தாலும் ஆச்மரத்ய மதம் ஸாது

வன்றென்று கொண்ட ஔடுலோமியானவர்—முக்தி தசையில் ஜீவாத்மாவுக்குப் பரமாத்மா
வோடு அபேதம் ச்ருதி ஸித்தமாயிருக்கையாலே முக்தி தசையில் பவிஷ்யத்தான ஜீவாத்ம
பரமாத்ம அபேதத்தை யவலம்பித்து ஐக்யம் சொல்லிற்றாக நிர்வஹித்தார்.


196. இனி காஶக்ருத்ஸ்ந மதம். கீழே விவரித்த ஔடுலோமி மதத்தில் மோக்ஷம்
வரையில் ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு பேத முள்ளதென்றும் முக்தி தசையில் அபேத
மென்றும் கொள்ளப்படுகிறவிது, *𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑍋𑌰𑍍𑌯𑍋𑌗𑌃 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥 𑌇𑌤𑍀𑌷𑍍𑌯𑌤𑍇 ।
𑌮𑌿𑌥𑍍𑌯𑍈𑌤𑌦𑌨𑍍𑌯𑌦𑍍𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌹𑌿 𑌨𑍈𑌤𑌿 𑌤𑌦𑍍𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌤𑌾𑌂 𑌯𑌤𑌃 ॥* என்கிற ஸ்ரீ விஷ்ணு
புராண வசன விருத்தம். வெவ்வேறு பட்ட பொருள்கள் ஒன்றோடொன்று சேருமே
யொழிய ஐக்கியத்தை யடையமாட்டா வென்று இதில் ஸ்பஷ்டமாகக் கூறியிருக்கின்ற
தன்றோ. முக்தி தசையில் ஜீவாத்மாவுக்கு 𑌅𑌪𑌹𑌤𑌪𑌾𑌪𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌦𑌿 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌵𑌿𑌰𑍍𑌭𑌾𑌵மே
யொழிய, பரமாத்மாவோடு ஐக்யாபத்தியென்பதில்லை என்னுமிடம் (4—4—1.) * 𑌸𑌂𑌪
𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌰𑍍𑌭𑌾𑌵𑌾𑌧𑌿𑌕𑌰𑌣த்தில் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. ஆக இத்தனைக்கும் முரணாக நிர்வ
ஹிப்பது அநுசிதம் என்று கொண்ட காஶக்ருத்ஸ்நர்—பரமாத்மா ஜீவாத்மாவினுள்
அந்தராத்மாவாக இருப்பதும், ஜீவாத்மாவுக்குப் பரமாத்ம ஶரீரத்வமும் * 𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿
𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍....𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑌰𑍀𑌰𑌮𑍍 * இத்யாதி ச்ருதிஸித்தமாகையாலும், ஶரீர வாசகங்களான
ஶப்தங்களுக்கு ஶரீரி𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤 𑌵𑌾𑌚𑌕𑌤𑍍𑌵𑌂 𑌆𑌤𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑌧𑌿𑌕𑌰𑌣ஸித்தமாகையாலும் ப்ரக்ருதத்
தில் ஜீவாத்மவாசியான ஆத்ம ஶப்தத்தை பரமாத்ம பர்யந்த வாசகமாக நிர்வஹிப்பதுதான்
உசிதமென்று கருதினர்.

197. இங்ஙனே வரிசையாக மூன்று மதங்களை உதாஹரித்த ஸூத்ரகாரர் மேலே
நான்காவது மதத்தைச் சொல்லாமையினால் காஶக்ருத்ஸ்ந மதமே ஸூத்ரகாராபிமத மென்
பது நிஸ்ஸந்தேஹமாக நிர்ணயிக்கப்படுகிறது. இது விசிஷ்டாத்வைத மதத்திற்கு விஜயத்வஜ
மானது.

198. காஶக்ருத்ஸ்ந மதந்தான் ஸூத்ரகாராபிமத மென்பதில் எமக்கும் விப்ரதி
பத்தி கிடையாது; இதை நாங்களும் இசைந்தேயிருக்கிறோம். ஆனால் (𑌅𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍇𑌃)
என்பதற்கு 'பரமாத்மாவானவர் ஜீவாத்மாவினிடத்தில் அந்தர்யாமியா யிருப்பதனாலே'
என்று நீங்கள் கூறுகின்ற பொருள் ஸாதுவன்று. 'பரமாத்மா தானே ஜீவாத்மாவாக
இருப்பதனாலே' என்கிற பொருள்தான் அவஸ்திதே: என்பதற்கு ஸமஞ்ஜஸமாகும்.
ப்ரக்ருதத்தில் ஐக்யத்தைப் பொருந்த விடவேணும்; இங்ஙனே பொருள் கூறினாலும் ஐக்யம்
பொருந்தி விடுகின்றதன்றோ. காஶக்ருதஸ்நர் ஶரீராத்ம பாவத்தை யவலம்பித்தே
ஐக்யத்தைப் பொருந்த விட்டாரென்று ஏதுக்கு ஒப்புக்கொள்ளவேண்டும்? என்கிறார்கள்
அத்வைதிகள்.

199. * 𑌅𑌤𑍍𑌤𑌾 𑌚𑌰𑌾𑌚𑌰𑌗𑍍𑌰𑌹𑌣𑌾𑌤𑍍 * என்னும் உபக்ரம ஸூத்ரத்தைக் கொண்ட
𑌅𑌤𑍍𑌤𑍍𑌰𑌧𑌿𑌕𑌰𑌣த்தில் * 𑌗𑍁𑌹𑌾𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌾𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑍌 𑌹𑌿 𑌤𑌦𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 * என்கிற ஸூத்ரத்தில்
𑌅𑌨𑍁𑌪𑌹𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌵𑌾𑌚𑌿யாய் த்விவசநாந்தமான (ஆத்மாநௌ) என்கிற ஶப்தத்
தினால் பரஸ்பர பிந்ந ஸ்வரூபஶாலிகளான ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு ஹ்ருதய குஹா
ப்ரவேசம் ச்ருதி ஸித்தமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ஜீவப்ரஹ்மங்களுக்கு
நிருபாதிகமான பேதமே ச்ருதிக்கு அபிமதமென்று ஸூத்ரகாரர் அபிப்ராயப்பட்டிருப்பது

ஸ்ரீ காஞ்சீ P. B. A. ஸ்வாமியின் திருவீதிவலம்—சேலம் டவுன்.
(7—8—63)




ஸ்பஷ்டமாகத் தெரிய வருகிறது. ஆக ஜீவப்ரஹ்மங்களுக்கு ஶ்ருதிஸித்தமான ஸ்வரூப பேதத்திற்கு விரோதமில்லாமல் நிர்வஹிப்பது தான் ஸூத்ரகாராபிப்ரேதமென்று இசைந்து தீரவேணும். ஏவஞ்ச, ஜீவப்ரஹ்மங்களுக்கு ஸ்வரூபைக்யத்தை யவலம்பித்து நிர்வஹிக்க வந்தது அவஸ்திதேரித்யாதி ஸூத்ரம்—என்று சொல்லுவது பொருந்தமாட்டாது.

200. அவஸ்திதி: என்கிற ஶப்தமானது 'ஹஸ்தே தண்ட: அவதிஷ்டதே; ப்ராஸாதே தேவதத்த: அவதிஷ்டதே' இத்யாதி வ்யவஹாரங்களிற்போல ஒரு வஸ்துவில் மற்றொரு வஸ்து இருப்பதைத்தான் சொல்லக் கடவது. * ப்ருதிவ்யாம் திஷ்டந். அப்ஸு திஷ்டந். தேஜஸி திஷ்டந். வாயௌ திஷ்டந். ஆகாஶே திஷ்டந். ஆத்மநி திஷ்டந். * இத்யாதிகளான உபநிஷத் வாக்யங்களில் பலகால் காணப்படுகிற ஸ்தாதோ: ப்ரயோகத்தை யநுஸரித்தே (அவஸ்திதே:) என்கிற ஸௌத்ர ப்ரயோகமுள்ளதென்பதை ப்ராமாணிகர்களின் உள்ளம் க்ரஹிக்க மாட்டாததன்று. அநாயாஸமாக க்ரஹிக்கும்.

ஆக, அவஸ்திதே: என்னும் பதத்திற்கு அத்வைதிகள் கூறும் பொருள் கேவலம் அபிநிவேஶமாத்ர விஜ்ரும்பிதமென்று கொள்க. ஏவஞ்ச, வாக்யாந்வயாதிகரணத்தில் விசிஷ்டாத்வைதமே ஸித்தாந்தீகரிக்கப்பட்டதென்பது தெளிவாயிற்று. ... ... *

நல்வார்த்தை நானூறில் த்விதீய சதகம்
முற்றுப்பெற்றது.

ஸ்ரீ காஞ்சீ P. B. A. ஸ்வாமியின் திருவீதிவலம்—சேலம் டவுன்.
(7—8—63)



மணவாளமாமுனிகள் மஹோத்ஸவம்.

மணவாள மாமுனிகளுக்கு மிகச்சிறப்பாக உத்ஸவம் நடைபெருத திவ்ய தேசமே கிடையாது. ஆனாலும் ஸ்ரீ காஞ்சீபுரியில் தேவப்பெருமாள் ஸன்னிதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் மணவாளமாமுனிகளுக்கு நடைபெறும் மஹோத்ஸவம்போல் எந்த திவ்ய தேசத்திலும் நடவாது. மாமுனிகளின் பக்தர்கள் தங்கள் வாழ்நாளில் ஒரு ஸம்வத்ஸரமாவது ஸேவிக்கப் பெறவேணும். நாளது 14—10—63 திங்கட்கிழமை உத்ஸவாரம்பம். 23—10—63 புதன்கிழமை சாத்துமுறை. தினப்படி காலை 10-மணிமுதல் 4-மணிவரையிலும், இரவு 7-மணிமுதல் 10-30-மணிவரையிலும் ப்ரஹ்மானந்தமயமான மஹோத்ஸவமிது. சாத்துமுறையன்றிரவு தேவப்பெருமாளும் பெருந்தேவித்தாயாரும் மாமுனிகளின் ஸன்னிதிக்கெழுந்தருளிப் பெரிய திருவோலக்கமாக நடைபெறும். மறுநாள் வியாழக்கிழமை யன்று இயற்பா ஆயிரமும் ஸேவையாகி இரவு9-மணிக்கு இயல்சாத்து நடைபெறும். * பொலிக பொலிக பொலிக வென்று வாழ்த்தும்படி தொண்டீரெல்லீரும் வாரீர்.

இங்ஙனம்,

பக்தகோஷ்டியார்.

ஸ்ரீ:

ஹாஸ்யக் கதைகளும் பக்திக் கதைகளும்

1. படிப்பில்லாத மாப்பிள்ளையின் பரிசு

ஒரு ஸம்ஸ்கிருத வித்வானுக்கு அருமையான பெண் ஒருத்தி இருந்தாள். அப்பெண்ணை நன்றாக ஸம்ஸ்கிருதம் பயின்ற ஒரு பிள்ளைக்கு விவாஹம் செய்து கொடுக்கவேணுமென்று ஆசைப்பட்டு அப்படிப்பட்ட வரனைத் தந்தை தேடிக் கொண்டிருந்தார். வெளியூரில் ஸம்ஸ்கிருத பாடசாலையில் ஸாஹித்யம் வாசித்துக் கொண்டிருந்த வொரு குமாரனுடைய தகப்பனார் ஞான லவலேசமுமில்லாத அந்த குமாரனை மிகப்பெரிய பண்டிதனாகப் பொய் சொல்லி விவாஹத்தை முடித்துக் கொண்டார். மாமனார் தம்முடைய ஜாமாதாவை மெய்யாகவே பண்டிதனென்று மருண்டு மகிழ்ந்திருந்தார். இப்படி யிருக்கையில் நவராத்ரி மஹோத்ஸவம் வந்தது. மஹாநவமியன்று ஸரஸ்வதீ பூஜை செய்வது வழக்கமாதலால் அந்த பண்டிகைக்கு ஜாமாதாவை வரும்படி விரும்பியிருந்தார் மாமனார். ஒரு வாரத்திற்கு முன்பே அழைப்புக் கடிதமனுப்பி யிருந்தார். வரனுடைய தகப்பனாருக்கு மிகுந்த கவலை யுண்டாயிற்று. ஸரஸ்வதீ பூஜையன்று சுவடிகளை யெல்லாமெடுத்துப் பரிஷ்கரித்து வைத்துப் பூஜை செய்வது வழக்கமாதலால் அந்த ஸமயத்தில் தம்முடைய குமாரனை அங்கு அனுப்பிவைத்தால் புத்தக விஷயமான பேச்சு ஏற்பட்டு இவனுடைய அறிவின்மையை யறிந்துகொண்டு மாமனார் வருந்துவரே ; இதற்கு என்ன செய்வது! என்று மிகவும் கவலைப்பட்டார். கடைசியாக ஓர் முடிவு செய்துகொண்டார். குமாரனுக்கு ஸம்ஸ்கிருதத்தில் சில வார்த்தைகளை ஐந்தாறு நாட்களில் பாடம் செய்து வைத்து மாமனாரகத்திற்கு அனுப்புவதாக நிச்சயித்து, அப்படியே பண்டிகைக்கு குமாரனை யனுப்புவதாக பதில் தெரிவித்து விட்டார். அன்று முதல் குமாரனுக்குப் பாடம் கற்பிக்க வாரம்பித்தார். 'பயலே! ஸரஸ்வதீ பூஜையன்று மாமனார் ஓலைச் சுவடிகளை யெல்லாம் ஒவ்வொன்றாக வெடுத்துப் பிரித்துப் பழுது பார்த்துக் கட்டி வைப்பர். அப்பொழுது நீ ஒன்றும் பேசாமலிருந்தால் நன்றா யிராது; ஆகவே நான் ஸம்ஸ்கிருதத்தில் சில வார்த்தைகளைச் சொல்லி வைக்கிறேன்; இவற்றை நாலு நாளில் உருப்போட்டுக் கண்டபாடம் செய்து வைத்துக்கொண்டு அங்கே உபயோகப் படுத்துவாயாக என்றார் தகப்பனார். குமாரன் அதற்கிசைந் தான். பிறகு பாடம் கற்பிக்கிறார். (அதாவது)

மாமனார் ஒரு சுவடியை யெடுத்துக் கட்டவிழ்க்கும்போது பயலே! கோயம் க்ரந்த: ?—(இது என்ன நூல்?) என்று கேள் ; அவர் "பாஷ்ய க்ரந்த:" என்றோ "பகவத் விஷய க்ரந்த:" என்றோ பதில் சொல்லுவர், அதைக் கேட்டவுடனே நீ "இதம் மயா அதீதம்"—இதை நான் வாசித்திருக்கிறேன் என்று சொல்லு. உன்னை அவர் பரீக்ஷிப்பரோ என்று பயப்படாதே ; ஜாமாதாவாகையாலே மரியாதை தப்பிப் பரீக்ஷிக்க மாட்டார். மறுபடியும் அவர் வேறொரு சுவடியை எடுத்து அவிழ்ப்பர். அப்போதும் நீ 'கோயம் க்ரந்த: ?' (இது என்ன நூல்) என்று கேள் ; புத்தகத்தின் பெயரை அவர் சொல்லுவர். உடனே நீ 'இதமபி மயா அதீதம்' —இதுவும் நான் வாசித்திருக்கிறேன் என்று சொல்லு. இப்படியே அடிக்கடி கேட்பதும் சொல்லுவதுமாக இருந்து கௌரவமாய்த் திரும்பிவந்து சேர் என்று சொல்லி, 'கோயம் க்ரந்த:?, இதம் மயா அதீதம், இதமபி மயா அதீதம்'— என்கிற இந்த மூன்று வார்த்தைகளை நாலைந்து நாள் பாடம் செய்வித்துக் குமாரனை மஹாநவமியன்று மாமனாரகத்திற்கு அனுப்பினார். போகிற வழி முழுதும் இந்த வார்த்தைகளையே சிந்தனை செய்துகொண்டு போய்ச் சேர்ந்தான். தகப்பனார்

சொல்லியிருந்தபடியே அங்கு மாமனர் காலை ஒன்பது மணிக்குமேல் தாள கோசங்களை யெல்லாம் சோதிக்கத் தொடங்கினர். ஜாமாதாவுக்கு ஒரு நாற்காலி கொடுத்து வீற்றிருக்கச் செய்தார். ஒரு சுவடியை யெடுத்து அவிழ்த்தவுடனே கோயம் க்ரந்த:? என்று கம்பீரமாய்க் கேட்டார் ஜாமாதா. மாமனர் ஆனந்தத்துடன் 'அயம் ப்ரௌடமனோரமா க்ரந்த:'—(இது ப்ரௌடமனோரமை) என்ருர். உடனே ஜாமாதா "இதம் மயா அதீதம்" (இதை நான் வாசித்திருக்கிறேன்) என்ருன். மாமனர் மிக மகிழ்ந்தார்; பிறகு மற்றொரு சுவடியை யெடுத்து அவிழ்க்க பழைய படியே கோயம் க்ரந்த:? என்ருன் ஜாமாதா. 'அயம் ப்ராமாண்ய வாத க்ரந்த:' (இது ப்ராமாண்ய வாதம்) என்ருர் மாமனர். அதற்கு 'இதமபி மயா அதீதம்' (இதுவும் நான் வாசித்திருக்கிறேன்) என்ருன் ஜாமாதா. இப்படி வினு விடைகள் நடந்து கொண்டிருக்கையில், மாமனர், எழுதாத ஏடுகளை இனி யெழுதுவதற்காக ஸித்தப் படுத்தி வைத்திருக்குமொரு சுவடியை எடுத்தவிழ்த்தார்; அப்போதும் ஜாமாதா பழையபடியே கோயம் க்ரந்த:? என்ருன். அதற்கு மாமனர் 'அயம் அலேக க்ரந்த:' —இது எழுதாத சுவடி என்ருர். ப்ரௌடமனோரமா, ப்ராமாண்யவாதம் என்ருற் போலே இதுவும் ஒரு சாஸ்த்ர க்ரந்தமென்று நினைத்துக்கொண்ட ஜாமாதா முன் போலவே "இதமபி மயா படிதம்" என்ருன். அதையும் தான் வாசித்திருப்பதாகத் தெரிவித்தபடி. அதுகேட்ட மாமனருக்கு வருத்தம் தாங்க முடியவில்லை. மாப்பிள் ளையின் ஞானச் சாயம் வெளிப்பட்டுவிட்டது. இக்கதையை மேலேயும் தொடர்ந்து எழுதவேணுமோ? ... . *

2. அண்ணுமலைக்கு ஹரோஹரா

திருவண்ணுமலையில் கார்த்திகை தீபம் என்பது ஒரு விசேஷ நாள். அன்று அவ்விடத்துச் சிவாலயத்தில் லக்ஷக்கணக்கான விளக்குகள் எரியுமாம். பிழைக்க வழி தேடின வொருவன் இத்திருவிளக்குத் திருப்பணியை தொண்டர்களிடத்தில் பணம் பிச்சை வாங்கி ஆயிரமிரண்டாயிர ரூபா செலவில் தானே நடத்துவதாகச் சொல்லிப் பல விடங்களில் சென்று பொருள் திரட்ட நினைத்தான். உண்மையில் அண்ணுமலை தீபத்திற்கும் இந்த பிச்சைக்கும் யாதொரு ஸம்பந்தமும் கிடையாது. பிழைப்புக்கு இதையொரு வியாஜமாகக் கொண்டானிவன். பிச்சைக்குப் புறப்பட நாள் பார்த்து நிச்சயித்து விட்டான். பிச்சைக்கு ஒருவனுகப் போவதைவிட மற்றுமொருவனைத் துணைகொண்டு இருவராகப் போவது நலமென்று தோன்றினபடியால் தன் பக்கத்து வீட்டுக்காரனைத் துணையழைத்தான். "வருமானத்தில் ஒரு ரூபாயில் 15 அணு அண்ணுமலைக்கு அர்ப்பணம் செய்து விடுகிறேன், ஒரு அணு உனக்குத் தருகிறேன்!" என்றும் சொன்னுன். அவனும் இதற்கு இசைந்தான். இருவரும் புறப்பட்டார்கள். பிச்சைக்காக ஒவ்வொரு வீட்டிலும் நுழையும்போது முதல்வன் 'அண்ணுமலைக்கு' என்று சொல்ல வேண்டியதென்றும், இரண்டாமவன் 'ஹரோ ஹர' என்று பின் பாட்டுப் பாட வேண்டியதென்றும் சங்கேதம் செய்து கொண்டார்கள். இருவரும் அப்படியே சொல்லிக் கொண்டு ஊர்தோறும் வீடுதோறும் பிச்சைக்குப் போகிருர் கள், இவர்கள் உண்மையாகவே தொண்டு செய்பவர்களென்கிற நம்பிக்கை கொண்டு ஒருவரும் இல்லை யென்னுது யாவரும் யதாசக்தி பொருள் தந்து வந்தார்கள்.

ஒவ்வொரு நாளும் 20, 25, 30, 40 இப்படியாக ரூபாய்கள் கிடைத்து வந்தன. முதல்வன் ரூபாய்க்கு 15 அணு வீதம் தான் எடுத்துக் கொள்வதும் ஒரு அணு வீதம் துணைவனுக்குக் கொடுப்பதுமா யிருந்து வந்தான். முதல்வன் எடுத்துக் கொள்ளுகிற 15 அணு பங்கில் ஒரு பைசாவும் அண்ணுமலைக்குச் சேருவதில்லை யென்றும், மொத்தமும் தானே கொள்ளை யடிக்கிருனென்றும் நாளடைவில் வெளிப் பட்டு விட்டது. கூரை வீட்டில் குடியிருந்து வந்த முதல்வன் பெரிய மாட மாளிகை

கட்டிவிட்டான். லேவா தேவியும் விசேஷமாகச் செய்து வருகிறான். துணைவனுக்கு ஒரு அணு பங்கு மட்டுமே கிடைத்து வருவதால் அவன் ஜீவிப்பதற்கே போதாமலிருந்தது. ஒரு நாள் அவனுடைய மனைவி அவனைக் கேட்டாள் "நீங்களிருவரும் சேர்ந்துதானே பொருளீட்டப் போகிறீர்கள், அவர் மட்டும் பெரிய பணக்காரராக ஆய்விட்டாரே, நீர் ஒன்று மில்லாமலே யிருக்கிறீரே, என்ன காரணம்? என்று கேட்டாள். அதற்கு அவன் உள்ளபடி சொன்னான் 'அவர் அண்ணுமலைக்கு என்கிறார், நான் ஹரோஹர என்கிறேன்; அவர் 15 அணு எடுத்துக் கொள்ளுகிறார்; எனக்கு ஓரணுவே கொடுக்கிறார்; இப்படித்தான் முதலிலேயே ஒப்பந்தம்' என்றான். அது கேட்ட மனைவி, 'இப்படி கூட ஒரு அசட்டுத்தனமுண்டா? ஒருநாள் அவர் அண்ணுமலைக்கு என்னட்டும், அன்றுநீர் ஹரோஹர என்று சொல்லும்; மறுநாள் நீர் அண்ணுமலைக்கு சொல்லும், அவர் ஹரோஹர சொல்லட்டும்; இதுதான் சரியான முறை என்று தூபம் போட்டு விட்டாள் மனைவி. துணைவன் இதை கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். மறுநாள் பிச்சைக்குப் போம்போது வீட்டுப்படி யேறுவதற்கு முன்னமே இவன் அண்ணுமலைக்கு என்று கத்தத் தொடங்கினான். அப்பெரியவன் 'இது நீ சொல்லக் கூடாது, நான்தான் சொல்லுவேன்; நீ ஹரோஹரதான் சொல்ல வேண்டும்' என்று பிணங்கினான். பிணக்கம் 5 நிமிடத்தில் முற்றி விட்டது. கைச்சண்டை, குத்துச்சண்டை, குடுமிச்சண்டை பிரபலமாய் விட்டது. ஊரெல்லாம் திரண்டு விட்டது. என்ன சண்டை? ஏதுக்குச் சண்டை? என்றார்கள். துணைவன் சொல்லுகிறான், 2, 3 வருடமாய் நாங்கள் பிச்சை யெடுத்து வருகிறோம். அண்ணுமலைக்கு சொன்னால் 15 அணு வீதம் பங்கென்றும், ஹரோஹர சொன்னால் ஓரணு வீதம் பங்கென்றும் இவனாகவே ஒரு ஏற்பாடு செய்து தானே அண்ணுமலைக்கு சொல்லி, தானே பணக்காரனாகி தானே மாட மாளிகைள் கட்டிக் கொண்டான்; நானொருநாள் நீயொருநாள் அண்ணுமலைக்கு சொல்லுவோமென்றால் கூடாதென்று அடிக்கிறான் புடைக்கிறான். இந்த நியாயத்தை நீங்களே தீர்க்கவேணும் என்றான். பின்னை என்னாகி யிருக்கு மென்பதை வாசகர்களே அறியவேண்டும். .... *

3. "மாப்பிள்ளை இவர்தான், கடுக்கன் இரவல்"

தீபாவளிப்பண்டிகைக்கு அழைக்கப்பட்ட மாப்பிள்ளை மாமியாரகம் சென்றார்; அவர்க்கு ஸொந்தமாகக் கடுக்கன் கிடையாது. மாமியாரகத்திற்கு டக்காகப் போக வேணுமென்று நினைத்து தன் தோழனணிந்து கொண்டிருந்த கடுக்கனை இரவல் வாங்கி யிட்டுக் கொண்டு அந்த தோழனையும் உடனழைத்துக் கொண்டு மாமியார் வீட்டுக்குப் போனார். அங்கு இடைகழித் திண்ணையில் ரத்தின கம்பளம் விரித்து மாப்பிள்ளையை வீற்றிருக்கச் செய்தார்கள். தோழனும் கூட உட்கார்ந்தான். மாமியார் அக்கம் பக்கத்து வீடுகளிற் சென்று மாப்பிள்ளைவந்திருக்கிற பெருமையைச் சொல்லிக் கொள்ள, ஒவ்வொருத்தியாகக் காணவந்தாள். வந்தவள் 'இவர்தானே மாப்பிள்ளை' என்ன, தோழப்பிள்ளை 'ஆமாம், மாப்பிள்ளை இவர்தான், கடுக்கன் இரவல்' என்றான். அப்படியா என்று சொல்லிவிட்டு அவள் உள்ளே போய் விட்டாள். பிறகு மாப்பிள்ளை தோழனைக் கடிந்தார்; கடுக்கன் இரவல் என்று சொல்லுவதற்காகத்தான் உன்னை யழைத்து வந்தேனோ? என்று மெதுவாகச் சீறினார். பிறகு மற்றொருத்தி வந்து 'இவர்தானோ மாப்பிள்ளை' என்ன, மாப்பிள்ளை இவர்தான் கடுக்கன் என்னுடையது என்றான் தோழன். இரவல் என்று சொன்னதற்காகச் சீறினபடியாலே அதை மாற்றிச் சொன்னான். அவளும் உள்ளே போய்விட்டாள், அப்போதும் தோழனை மாப்பிள்ளை சீறினார். மறுபடியும் ஒருத்தி வந்து 'மாப்பிள்ளை இவர்தானோ' என்ன, தோழப்பிள்ளை 'மாப்பிள்ளையும் இவர்தான் கடுக்கனும் இவருடையதுதான்' என்றான். அதற்கும் சீறினார் மாப்பிள்ளை. வேறொருத்தி வந்து கேட்க, 'மாப்பிள்ளை இவர்தான், கடுக்கன் ஸங்கதி எனக்குத் தெரியாது' என்றான்

தோழன். அதற்கும் சீறினர் மாப்பிள்ளை. மற்றுமொருத்தி வந்து கேட்க, 'மாப்பிள்ளை இவர்தான், கடுக்கன் பேச்சை யெடுத்தால் இவருக்கு கோபம் வருகிறது என்றான் தோழன். பிறகு மாப்பிள்ளை கோபம் தாங்க முடியாமல் மணைக்கட்டையை யெடுத்து அவன் மண்டைமேலெறிந்து போக விட்டு உள்ளே சென்றார். .... *

4. பண்டிதர்கள் மட்டும் உகக்கக் கூடிய கதை

திருக்கண்ணபுரத்தில் ஸுப்ரஸித்த வித்வானாக எழுந்தருளியிருந்த பட்டப்பா ஸ்வாமியின் பிதாமஹர் ஒரு ஆசார்ய திருநக்ஷத்திரத்தன்று இரவு 10 மணிக்குமேல் தம் திருமாளிகையினின்று ஸன்னிதிக்கு எழுந்தருளுகிறார். வழியில் வெளிச்சம் அடியோடு இல்லை. நல்ல கருக்கிருட்டு. எதிரே வருகிற வொரு ஸ்வாமி இவரெழுந் தருள்வதறியாமல் இவருடைய திருமுடியிலே இடித்துக்கொண்டார். வலுத்த நோவு உண்டாயிற்று. ஐயோ கஷ்டகாலமே என்றார். இவருடைய திருமிடற்றோசையி லிருந்து இன்னாரென்று தெரிந்துகொண்ட அவர் மிகவும் அநுதபித்து 'ஐயோ அபசாரத்துக்கு ஹேதுவாச்சுதே' என்றார். அதுகேட்ட இந்த ஸ்வாமி பொறுக்க முடியாத நோவையும் பொருள்படுத்தாமல் "அப்பா! அபசாரத்துக்கு ஹேதுவே இப்பாடு படுத்தினால் அபசாரமே யுண்டானால் அது எப்பாடு படுத்துமோ?" என்றார். இந்த வார்த்தையின் ரஸம் அவர்க்குத் தெரிய ப்ரஸக்தியில்லை. அவ்விருளிலேயே இன்னொரு வித்வான் அருகே யிருந்தார். அவர் இதை மிகவும் ரஸித்து 'ஸ்வாமிந்! இந்த விலையுயர்ந்த வார்த்தையை அஸ்தானத்திலே வர்ஷிக்கிறதே' என்றாராம். உண்மையில் வித்வானான அவரைத் தெரிந்துகொண்ட இந்த ஸ்வாமி ஸாதித்தாராம் —'ரங்கஸாமீ! இச் சொல்லின் சுவையை நீயாவது தெரிந்துகொண்டாயே, போதும்' என்று. இந்த வார்த்தையின் மருமம் வித்வான்களுக்கு எளிதில் விளங்கும். மற்றை யோர்க்கும் விளங்கச் சிறிது விவரிப்போம். உலகில் அபசாரம் நேருவதென்பது ஸஹஜம். அப்போது பெரும்பாலும் பண்டிதர் பாமரர் என்கிற வாசியற எல்லாரும் "அபசாரத்துக்கு ஹேதுவாச்சே" என்று அநுதாபத்தோடு சொல்லுவது வழக்கம். இது தவறு. ஐயோ அபசாரமாச்சே என்று சொல்லவேணுமேயொழிய, அபசாரத் துக்கு ஹேதுவாச்சே என்று சொல்லக்கூடாது. ஹேதுவாவது காரணம். காரணந்தான் இப்போது உண்டாயிற்று, கார்யமான அபசாரம் இன்னும் உண்டாக வில்லை என்றதாக ஏற்படும். இப்படி தவறாக வழங்கக்கூடாதென்பதை இந்த இதிஹாஸம் சிக்ஷிக்கும். .... *

5. "ஐநூறு நானூறு முன்னூறு இருநூறு"

ஒரு கல்விக்காரப் பயல் ஒரு மஹாப்ரபுவை யடுத்தான். பயலுக்கு எழுதப் படிக்க ஒன்றும் தெரியாது. ஆனால் வெகு தமாஷாகப் பேசுவன். அப்பேச்சில் மயங்கி பிரபு அவனோடு வெகு நேசமாக இருந்து வந்தார். அவனுக்கு மாதச் சம்பளமாக ஒன்றும் ஏற்பாடு செய்யாமல் உணவுமட்டும் அளித்துவந்து 'உனக்கு விவாஹம் வரும்போது நூறு ரூபா தருகிறேன்' என்று சொல்லி வைத்தார் பிரபு. சில நாட்களில் அவனுக்கு விவாஹம் குதிர்ப்பாடாயிற்று, 'தாங்கள் முன்பு வாக்களித்தபடி ஐநூறு ரூபா தாருங்கள்' என்றான். பயலே! பொய் சொல்லு கிறாயே, நான் ஐநூறு ரூபா தருவதாகச் சொன்னேனா? என்றார் பிரபு. நானூறு ரூபா தருவதாகச் சொன்னீர்களே அதையாவது கொடுங்கள் என்றான். மறுபடியும் பொய் சொல்லுகிறாயே என்றார் பிரபு. 'ஸரி, முன்னூறு ரூபா தருவதாகச் சொன் னீர்களே, அதையாவது கொடுங்கள்' என்றான் பையன். என்னடா இது, பொய்யே பேசுகிறாயே என்றார் பிரபு. ஸரி இருநூறு ரூபா தருவதாகச் சொன் னீர்களே, அதையாவது தாருங்கள் என்றான் பயல். இப்படி பொய்யே பேசினால்

ஒரு பைசா கூட தரமாட்டேனென்றார் பிரபு. ஸரி ஸரி, கோபம் வேண்டாம், நூறு ரூபாய்தான் தாருங்கள் என்றான் பயல். பிறகு பிரபு 'பயலே! முதலிலேயே இப்படி கேளாமல் பொய்யும் புளுகும் பேசினயே ஏன்? இவ்வளவு பொய்யனான வுன்னை நான் எப்படி இங்கு வைத்துக் கொள்வது? என்றார் பிரபு. அதற்குப் பயல் சொல்லுகிறான்—மஹாப்ரபோ! என் வாயில் ஒரு பொய்கூட வராது; நீங்கள் சொல்லாததை நான் ஒருபோதும் சொல்ல மாட்டேன். நூறு ரூபா கொடுக்க ஒப்புக்கொண்டதாக நீங்கள் சொல்லுகிறீர்கள். 'இருநூறு ரூபா கொடுக்கிறேன்' என்று சொல்லவில்லையா? (இரு—என்னிடமிரு, நூறு ரூபா தருகிறேன் என்றதாக ஒரு பொருள். இருநூறு ரூபா கொடுக்கிறேனென்றதாக ஒரு பொருள்.) முன் நூறு ரூபா கொடுக்கிறேனென்று சொல்லவில்லையா? (முன்—முன்பு என்று ஒரு பொருள். முந்நூறு ரூபாயென்று ஒரு பொருள்.) நான் நூறு ரூபா தருகிறேன் என்று சொல்லவில்லையா? (நான் நூறு என்பதைச் சேர்த்தால் நானூறாயிற்று.) ஐ நூறு ரூபா தருகிறேனென்று சொல்லவில்லையா? (ஐ என்பது ஆங்கிலம். நான் என்றபடி.) ஆகவே நானென்றும் பொய் சொல்லவில்லையே என்றான் பயல். இதைக் கேட்ட பிரபுவுக்கு ஆனந்தம் தாங்க முடியாமற்போக "இப்பயலுக்கு 1,500 ரூபா கொடு என்று கஜாஞ்சிக்குக் கட்டளையிட்டார் பிரபு. அது கேட்ட பயல் "இதுவும் தாங்கள் ஏற்கெனவே ஒப்புக் கொண்டதுதானே என்றான். எப்படிடா? என்று பிரபு கேட்க, நூறும் இருநூறும் முந்நூறாச்சா? முந்நூறும் முந்நூறும் அறுநூறாச்சா; அறுநூறும் நானூறும் ஆயிரமாச்சா. ஆயிரமும் ஐநூறும் 1,500 ஆச்சா. புதிதாக நீர் என்ன கொடுக்கச் சொல்லி விட்டீர்? என்றான் பயல். பிரபுவோ ஆனந்தக் கடலில் ஆழ்ந்துவிட்டார். தன் வயிற்றிற் பிறந்த மகனுக்குப்போல் இருபதினாயிரம் ரூபா செலவில் விவாஹத்தை நடத்திவைத்து மகனுக்கும் மேலாக வளர்த்து வந்தார் பிரபு. .... *

6. "ஆபதர்த்தம் தநம் ரக்ஷேத்"

ஒரு ஸ்வாமி இயற்கையாக ரிக்த தசையிலிருந்தார். தம்முடைய க்ராமத்திலிருந்து அரையோஜனை தூரத்திலுள்ள ஓர் அக்ரஹாரத்தில் ஒரு கோவிலில் திருவாராதனம் செய்து ஜீவித்துவந்தார். நித்யமும் காலையெழுந்து அங்கே போய் இரவு எட்டு மணிக்குத் திரும்பி ஸ்வக்ராமம் வந்து சேருவர். வழியில் கள்ளர் பயமிருந்தாலும் இவரிடத்தில் ஒன்றுங் கிடையாததலால் கள்ளர் இவரிடம் அணுகாமலேயிருந்தார்கள். நாளடைவில் இவர் துட்டுகாசு மலிந்தவராகி தனிகரானார். அப்போது "ஆபதர்த்தம் தநம் ரக்ஷேத்" என்கிற நீதிச்லோகத்தை நினைத்து பொருளை அதிகமாகச் செலவிடாமல் ரக்ஷிக்கத் தொடங்கினர். பணம் பெட்டியிலும் பண்டாபீஸ்களிலும் இருப்பதைக் காட்டிலும் கையிலேயே இருந்தால் நல்லதென்று தோன்றி கடுக்கன் மோதிரம் பொன்னரைநாண் முதலான உயர்ந்த திருவாபரணங்களைச் செய்வித்து அணிந்துகொண்டார். இரண்டாயிரம் ரூபா விலையுள்ள பூஷணங்கள் இவருடம்பில் ஏறிவிட்டன. "கள்ளர் பயமுள்ள வழியில் நாம் நித்யமும் போய்வரவேண்டியிருக்கிறதே, இதனால் ஏதாவது அபாயம் நேரிடுமே' என்கிற அச்சம் இவர்க்குத் தோன்றவேயில்லை. 'பல வருடங்களாக இல்லாத அபாயம் இப்போது புதிதாக வந்துவிடுமோ?' என்று நினைத்துவிட்டார். இவர் தம்மூரிலிருந்து பகலில் போகும்போது திருவாபரணங்கள் ஜ்வலிக்கும்படி போவதனால் அதைக் கண்டுகொண்டிருந்தவர்களுக்கு தஸ்கரபுத்தி யுண்டாகிவிட்டது. ஒருநாள் இவர் இரவில் திரும்புகையில் கள்ளர் வழிமறித்து ஸகலத்தையும் பறித்துக் கொண்டார்கள். அதனால் இவர் ஈஷத்தும் வருத்தமடையாமல் "ஆபதர்த்தம் தநம் ரக்ஷேத்" என்கிற வசனத்திற்குத் தாம் உண்மையான அர்த்தம் கண்டுபிடித்து விட்டதாக ஒவ்வொருவரிடத்திலும் பெருமையடித்துக் கொண்டார். [அது வித்வான்களே ரஸிக்கத்தக்கதாதலால்

அன்னவர்களே இங்குக் களிக்கக் கடவர்கள்.] ஆபதர்த்தம் என்பதற்கு எல்லாரும் கிரஹித்திருக்கிற பொருள் 'ஆபந்நிவாரணார்த்தம்' என்று. ஆபத்து நேர்ந்தால் தரித்ரன் அதைப் போக்கிக்கொள்வது அரிது. துட்டு காசு உள்ளவனாயிருந்தால் ஆபத்தை எளிதாகப் போக்கிக் கொள்ளலாம் என்பது விவக்ஷையாதலால் (ஆபதர்த்தம்) என்பதற்கு ஆபந்நிவாரணார்த்த மென்று விவரித்து வந்தார்கள். இவருடைய அநுபவம் அப்படியில்லையே. தனம் வந்தது காரணமாக ஆபத்து நேர்ந்தபடியால் ஆபதர்த்தம் என்பதற்கு ஆபத்து விளைவதற்காக என்கிற பொருள்தான் யுக்த மென்று இவர் பிரவசனம் செய்ய ஆரம்பித்தார். தனமுள்ளவர்கள் பலர் க்ருபணர்களாயிருந்து கொண்டு தனத்தினாலே ஆபத்தைப் போக்கிக் கொள்வதில்லை யென்பதைப் பெரும்பாலும் கண்டுவருகிறோம். தரித்ரர்களுக்கு ஆபத்து நேராமையையும், தனிகர்களுக்கே ஆபத்து நேருவதையும் நிராக்ஷேபமாக யாவரும் ஒப்புக்கொள்ளுவர்கள். ஆகவே (ஆபதர்த்தம்) என்பதற்கு ஆபத்து விளைவதற்காக என்கிற பொருள்தான் பொருத்தமானது என்று எங்கும் அவர் உபந்யாஸம் செய்துகொண்டு "இரண்டாயிரம் ரூபா விலையுள்ள பொருள்கள் போனதற்கு நான் கொஞ்சமும் வருந்தவில்லை, இந்த மஹார்த்தம் அறியப்பெற்றதற்கு மிகமிக மகிழ்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு திரிந்தாராம். .... *

7. [காசு கொடாதிருந்தால் இந்தஅடி அடித்திருப்பனா?]

வஞ்சகம் செய்து ஜீவிப்பதே தொழிலாயிருக்கு மொருவன் சொக்காய் தலைப்பாகை ஜரிகை ருமால் முதலானவை இரவல் வாங்கி யணிந்துகொண்டு ஓர் இரவல் மோடர் காரில் சென்று ஒரு பெரிய ஜவுளிக்கடை வாசலில் வெகு கம்பீரமாக இறங்கினான். இவனுடைய டக்கைக் கண்ட வியாபாரி வருக வருகவென்று மரியாதையுடன் வரவேற்றுப் பெரிய ஈஸிசேரில் வீற்றிருக்கச் செய்தான். என்னென்ன சரக்குகள் தேவையென்று வெகு விநயமாகக் கேட்டான். வஞ்சகன் தன்னோடுகூட ஒரு பெரிய வஞ்சகனைத் துணையழைத்து வந்திருந்தபடியால் அவன் இவனைப்பற்றி டம்பப் பேச்சுக்கள் பலவும் பேசிவிட்டான். அதிலிருந்து ஜவுளி வியாபாரி 'இன்று நாம் லக்ஷாதிகாரியாகப் போகிறோம்' என்று பெருமிதங் கொண்டான். மிக விலையுயர்ந்த பட்டுச் சேலைகளையும் ஜரிகை துப்பட்டாக்களையும் ஸாதராக்களையும் சால்வைகளையும் எடுத்தடுக்கி விட்டான். இடையில் வஞ்சகன் தன் துணைவனை நோக்கி செக் புத்தகம் மறவாமல் கொண்டுவந்தையா என்று கேட்பதும், அதை மறப்பேனோ வென்று அவன் பதில் சொல்லுவதாகவும் ஏகாந்தப் பேச்சுபோல் ஒரு நாடகம் காட்டிவிட்டான். வியாபாரியின் ஆனந்தமோ எல்லைகடந்து செல்லுகின்றது. பட்டிபோட உத்தரவிட்டு விட்டார் வஞ்சகர். பட்டியெழுதும் வியாபாரி, ஏதாவது சில சரக்குகளை இவர் வேண்டாமென்று சொல்லிவிடுவரோ என்கிற அச்சத்தினால் 'சரக்குகளைக் கட்டிக் கட்டி காரில் ஏற்றுங்கள்' என்று சிப்பந்திகளுக்குக் கட்டளையிட, அவர்கள் ஒரே நொடியில் காரை மூட்டைகளால் நிரப்பிவிட்டார்கள். வஞ்சகப் பிரபுவும் வியாபாரியோடு ஏதோதோ பேசிக்கொண்டுவேறு பராக்குகளை யுண்டாக்கி மெதுவாகக் காரில் உட்கார்ந்ததும் கார் நகர ஆரம்பித்தது.

ஜவுளிக்கடை மிகப் பெரிதாதலால் கூட்டுறவினர் பலருண்டு; பிரபு காரேறும்போது செக்கு கொடுத்திருப்பரென்றே ஒவ்வொருவரும் நினைத்துவிட்டார்கள். பிறகு எவ்வளவு தொகைக்கு செக்கு கொடுத்தார்? எந்த Bankக்குக் கொடுத்தார்? என்று விசாரணை செய்கையில் யாரிடமும் செக்கு கொடுபடவில்லை யென்று வெளியாயிற்று. 'எவ்வளவு பெரிய மனிதரவர்! கொடாமலா போயிருப்பர்' என்பார் சிலரும், 'பிறகு குமஸ்தாவிடம் அனுப்புவர்' என்பார் சிலருமாயிருக்கையில் கடைக்குத் தலைவனானவன் கார்போட்டுக் கொண்டு ஓடி அந்தக் காரைப் பிடித்து 'பிரபுக்களே! பணம் சேரவில்லையே' என்றான். பிரபு உடனே கீழிறங்கி அவனைக்

கன்னத்தில் ஓங்கி யறைந்தான். வேறொன்றும் பேசாமல் கனத்த அடி கொடுத்தான். அவனே 'காசு கொடாதிருந்தால் இந்தஅடி அடித்திருப்பனு?' என்று சொல்லிக்கொண்டே காரேறிக் கடை சென்று சேர்ந்து அங்குள்ள ஒவ்வொருவரிடத்திலும் இதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டு "இந்த அறை அறைந்தவர் செக்கு கொடாமலிருந்திருக்கமாட்டார், நீங்கள் நழுவ விட்டீர்கள்" என்று அவர்களைக் கஸறிக்கொண்டு கிடந்தான். அவன் உடனே கப்பலேறிப் போய்ச் சேர்ந்தான் ரங்கூனே சிங்கப்பூரோ. ... ... *

8. "ஹந்த சோரோபி அப்ராமாணிக:"

ஒரு ஸ்வாமி நல்ல வித்வான். சாஸ்த்ரபாண்டியத்தில் நிகரற்றவராயினும் லௌகிக ஜ்ஞானம் சிறிதுமில்லாதவர். இவர் சில ஹவ்ய கவ்ய விசேஷங்களுக்காக வெளியூர் போயிருந்தார். அங்கே வேஷ்டி உத்தரீயம் கொஞ்சம் ரூபாய்கள் சில்லரைகள் கிடைத்தன. அவற்றுடன் திரும்பி ஸ்வக்ராமம் வருகிறார். பட்டப் பகலில்தான் வருகிறார். சில கள்ளர்கள் வந்து·வழிபறிக்கத் தொடங்கினார்கள். "ஹந்த! அஹந்யபி கநம் தஸ்கராச் சோரயந்தி" [அடடா, பகலிலுங்கூட திருடர்கள் வந்து அபஹரிக்கிறார்களே! இது என்ன ஆச்சரியமாயிருக்கிறதே] என்று தம்முள் தாம் வியந்து கூறுகின்றார். வந்த கள்வர்கள் இவருடைய அரை வேஷ்டி தவிர மற்றதை யெல்லாம் கொள்ளை கொண்டார்கள். இவருடைய மூட்டையில் ரூபாயாக 4ரூபா இருந்தது. வந்த கள்வர்களோ மூவர். 4 ரூபாயை ஸரிஸமமாகப் பங்கிட்டுக் கொள்ள முடியாமல் சில்லரை மாற்ற வேணுமென்று பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது இந்த வித்வான்ஸ்வாமி அந்த கள்ளர்களை நோக்கி உங்களுக்குச் சில்லரை வேண்டியிருக்கிறதா என்ன? எத்தனை ரூபாய்க்கு வேணும்? என்றார். 'எவ்வளவிருந்தாலும் வேண்டியதுதான், இருக்கிற சில்லரையைக் கொடுங்கள், ரூபா கொடுக்கிறோம்' என்றார்கள். ஹவ்ய கவ்யங்களில் சில்லரையாக அவர்கையில் கிடைத்தவற்றை கச்சத்திற்குள்ளே முடிபோட்டு வைத்திருந்தார். அதை யவிழ்த்து எண்ணிப் பார்த்து 'ஸரியாக நாலுரூபாய்க்கு சில்லரையிருக்கிறது, எடுத்துக் கொள்ளுங்கள், ரூபாய் கொடுங்கள்' என்று சொல்லிக் கொண்டே சில்லரைகளை யெல்லாம் அவர்களிடம் கொடுத்துவிட்டு ரூபா ரூபா என்று கையேந்தினார். மேல் நிகழ்ச்சியை என்ன சொல்லுவது! "ஹந்த! சோரோபி அப்ராமாணிகঃ" என்கிறார் வித்வான். கள்ளன் பொய் சொல்லமாட்டான், பொய் சொல்லுமவன் திருடமாட்டான் என்றிருந்தாராம். கள்ளன் கூட பொய் சொல்லுகிறானே யென்று ஆச்சரியமாகப் பேசிக்கொண்டே போனார். இந்த ஆச்சரியத்தில் அவர்க்குப் பணம் பறியுண்டதுக்கம் தெரியவில்லை. ... *

9. ஆசார்ய சிஷ்யர்களின் அற்புதமான கதை

மிகச் சிறந்த வித்வானொருவர், ஆசார்யபீடம் வஹிப்பவர், ஆஸ்தான வித்வான்கள் நால்வருடன் சிஷ்ய யாத்திரை புறப்பட்டார். கல்கத்தா மாநகரம் சென்று சேர்ந்து அவ்வூரில் தம்முடைய சிஷ்யர்களில் தலைவனான ஒரு ஸேட்டுக்குத் தம்முடைய வரவைத் தெரிவிக்க வேண்டி முதல்வரான ஆஸ்தான வித்வானை அவனிடமனுப்பினார். அவர் வந்து ஸேட்டைக் கண்டவுடனே ஒன்றும் பேசத் தோன்றாமல், திகைத்து நின்றார்; ஏனென்றால் அந்த ஸேட்டு மிகவும் ஸ்தூலகாயர். அங்கிருக்கிற வாசற்படி வழியாக அந்த ஸேட்டு போக்குவரத்து செய்ய முடியாதென்று அவருடைய எண்ணம். ஆகவே இவன் எப்படி இந்த பங்களாவினுள்ளே வந்து சேர்ந்தானென்கிற விசாரம் அந்த வித்வான் மனத்தில் தோன்றிவிட்டது. அதனால் ஒன்றும் வாய்திறவாமல் திகைத்து நின்றார். அது கண்ட ஸேட்டு 'நீர் யார்? எதற்காக வந்தீர்? ஏன் நிற்கிறீர்? என்று கேட்க, அதற்கு வித்வான் 'ஸேட்ஜீ! அதைப்பற்றி பிறகு பேசுகிறேன்; என்னுடைய பெரிய ஸந்தேஹத்தை நீ முதலில்

தீர்க்க வேணும்; இந்த பங்களா கட்டினபிறகு நீ இதனுள்ளே புகுந்திருக்க முடியாது; முன்னடியே உன்னை உள்ளே உட்காரவைத்து இது கட்டியிருக்கவேண்டும் என்று நினைக்கிறேன். இப்படித்தானு? வேறுவிதமா? சொல்லாய் சீமானே!' என்ருர். இது கேட்டவுடனே ஸேட்டுக்குக் கோபம் உண்டாயிற்று. ஏதோ சிறிது பருத்திருக்கிருேமென்று நம்மை இப்படி பரிஹாஸம் செய்கிருனேயிவன்! என்று சீறி 'இந்த பிராமணனை ஒரு அறையில் அடையுங்கள்' என்று கட்டளையிட்டான். அப்படியே வித்வான் அடைபட்டுக் கிடக்க. ஆசாரியர் வெகு நாழிகை எதிர்பார்த்தும், சென்ற வித்வான் வரக்காணுமல் இரண்டாவது ஆஸ்தான வித்வானை ஸேட்டிடம் போக விட்டார். அவர் வந்து வாசலிலேயே செய்தி விசாரித்து நடந்ததைத் தெரிந்து கொண்டு ஸேட்டிடம் சென்று, 'ஸேட்ஜீ! எங்களில் ஒருவன் இங்குவந்து ஏதோ தவருன கேள்வி கேட்டதாகத் தெரிகிறது. அவன் முழுமூடன்; ஏதோ வொருவிதமாக இந்த பங்களாவுக்குள் நீ புகுந்தாய்விட்டது; அதைப்பற்றி இப்போது ஏன் விசாரம்? நாளைக்கு நீ மரணமடைந்து விட்டால் உன்னை எவ்வழியாலே வெளிப்படுத்துவது என்கிற விசார மன்ருே இப்போது செய்யத் தக்கது; அதை விட்டு 'எப்படி உள்ளே புகுந்தாய்?' என்கிற வீண் விசாரத்தை அந்த மூடன் ஏதுக்குச் செய்தான்?' என்ருர். அது கேட்ட ஸேட்டு அளவிறந்த கோபம்கொண்டு அவரையும் உள்ளேயடைக்க உத்தரவிட்டான். அவரும் அடைபட்டுக் கிடக்க, ஆசாரியர் நெடு நேரம் எதிர்பார்த்துவிட்டு மூன்ருமாஸ்தான வித்வானை ஸேட்டிடம் போக விட்டார்.

இவர் வந்து வாசலிலேயே, முன்வந்த இருவருடையவும் செய்தியை விசாரித்தறிந்து ஸேட்டிடம் வந்து, 'ஸேட்ஜீ! எங்களில் இருவர் இவ்விடம் வந்து மிக மூடத்தனமான பேச்சுகளைப் பேசினதாகக் கேட்டு மிக வருந்துகிறேன்; நீ மரணமடைந்தொழிந்த பிறகு எப்படி உன்னை வெளியிற் கொண்டுபோவதென்கிற விசாரம் ஏதுக்கு? சுவர்களை ஜாடாக இடித்துவிட்டு எளிதில் கொண்டுபோகத் தடையென்ன? ஏதுக்கு வீண்விசாரம் கொண்டார் எங்கள் வித்வான்? அந்த மஹா மூடர்களை விட்டுத் தொலை' என்ருர். அது கேட்ட ஸேட்டு இன்னமும் கோபம் பொங்கி அவரையும் உள்ளே யடைக்க உத்தரவிட்டான். அவரும் அடைபட்டுக் கிடக்க, வெகு நாழிகை பொறுத்து ஆசாரியரால் அனுப்பப்பட்ட நான்காம் வித்வான் ஓடிவந்து முன்னே வந்த மூவருடையவும் செய்திகளை வாசலிலேயே விசாரித்தறிந்துகொண்டு ஸேட்டிடம் வந்து, ஸேட்ஜீ! எல்லா விஷயங்களையும் கேள்விப்பட்டேன்; என்ன அநியாயமான வார்த்தைகள்! இந்த பங்களா எவ்வளவு மனோஹரமாயிருக்கிறது! இதை யிடித்து உன்னை வெளிப்படுத்துவதென்பது ஐயோ, என்ன பேச்சு! எதற்காக இடிக்க வேண்டும்? நீ மாண்டபிறகு உன்னைக் கத்தியினுல் சதை சதையாக அறுத்தால் ஒரு புட்டுக்கூடையில் வெளியேற்ற முடியாதா? ஒரு கூடையில் முடியாதென்ருல் நாலைந்து கூடைதான் ஆகட்டுமே; நாலைந்து நிமிஷத்தில் அநாயாஸமாக வெளியேற்றக் கூடியதாயிருக்க, சுவர்களை யிடிப்பதும் வாசற்காலைப் பேர்ப்பதுமான ஆலோசனைகள் என்ன அநியாயம்! என்ருர்.

ஸேட்டுக்குக் கோபம் தாங்கமுடியவில்லை. நால்வர்க்கும் கொடுந்தொழில் புரியக் கட்டளையிட்டான். இப்படி நால்வரும் சென்று திரும்பிவராமற் போகவே ஆசாரியர் நேராக ஓடிவந்து நால்வர் செய்தியையும் விசாரித்தறிந்து! திடுக்கிட்டு ஸேட்டிடம் ஓடி வந்து, 'அப்பா! லௌகிகமொன்று மறியாத மூடர்களின் பேச்சைப் பொருள் படுத்தலாமா நீ? உன்னைச் சதைசதையாக அறுத்துக் கூடையில் வெளியேற்றுவதென்பது எவ்வளவு அநீதியான பேச்சு; காதால் கேட்க முடியவில்லையே; நீ மாண்டொழிந்த பிறகு இந்த பங்களா தான் ஏதுக்கு? சுவரை யிடிப்பதும் வாசலைப் பெயர்ப்பதும் ஏதுக்கு? இந்த பங்களாவோடே உன்னைப் பொசுக்கிவிட முடியாதா? பிறகு இந்த பங்களாவை ஆளத்தக்கவன் யாவனுளன்?' என்று வாயோயாமல் ஏதேதோ சொல்லிக்கொண்டிருந்தார். ஸேட்டுக்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லை. மேலேயும் கதை போக வேணுமோ? .... *

10. பண்டிதர்கள் உகக்கும் கதை

"அரஸிகேஷு கவித்வ நிவேதநம் சிரஸி மாலிக மாலிக மாலிக"

ஒரு விஷ்ணுகோவிலின் வாசலில் ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் நிற்கிறார். அவர் அடியோடு படிப்பில்லாதவர், ஆனால் வீர வைஷ்ணவர். சைவர் முதலிய இதர மதஸ்தர்களைக்கண்டால் அருவருப்புக் கொள்வர். ஒரு அத்வைதி பக்தர் உடம்பு முழுதும் விபூதியணிந்துகொண்டு பெருமாளைஸேவிக்கக் கனவேகமாகவருகிறார். அவர்உண்மையில் விஷ்ணு பக்தியுமுடையவர். அவரை இந்த வீர வைஷ்ணவர் உள்ளே புகக் கூடாதென்று தகைந்து விட்டார். அதற்கு அவர் "பெருமாளே! என்னை ஏதுக்குத் தடை செய்கிறீர்கள்?" என்று கேட்டார். 'நீ உடம்பெல்லாம் விபூதியணிந்திருப்பதால் வீர சைவனாகக் காண்கிறாய்; நீ உள்ளே போனால் எங்கள் பெருமாளை தூஷிப்பாயே யொழிய பூஷிக்கமாட்டாய்; ஆதலால் உன்னை உள்ளே விட முடியாது' என்றார் வீரவைஷ்ணவர். அதற்கு அவர் சொன்னார் 'பெருமாளே! கனவிலும் அப்படி நினையாதீர்கள், நான் ஹரி பக்தன்; உள்ளேபோய் ஹரி ஸ்துதி பண்ணுவேனே யொழிய வேறு எதுவும் செய்யமாட்டேன்' என்றார். அது கேட்ட வைஷ்ணவர், 'அப்படியானால் நீ உள்ளேபோய் என்னவென்று சொல்லுவாய்? அதைச் சொல்லு' என்றார். "ஹரயே நமஃ" என்பேன் என்றார் அந்த பண்டிதர். அதுகேட்ட வைஷ்ணவர் தம்பக்கத்திலுள்ள வைஷ்ணவர்களை நோக்கி 'பார்த்தீர்களா? பார்த்தீர்களா? இவனுக்கு எவ்வளவு கொழுப்பு! நீங்களே பாருங்கள்; ஹரியினிடத்திலே போய் ஹரியேநமஃ என்று சொல்ல வேண்டியிருக்க அப்படிச் சொல்லாமல் ஹரயேநமஃ என்பேனென்கிறானே; ஹரனுக்கு நமஸ்காரம் செய்பவனுக்கு இங்கு என்ன வேலை' என்று கத்துகிறார். அதுகேட்ட அந்த அத்வைதி வெகு விநயத்துடன் 'பெருமாளே! கொஞ்சம் நிதானித்துக் கேளுங்கள்; ஹரி-ஙே என்றிருந்தது, அதன்மேல் குணம் வந்தது' என்று வியாகரண ப்ரக்ரியை சொல்லத் தொடங்கினார். ஹரி சப்தம் சதுர்த்தி விபக்தியின் ஏக வசனத்தில் ஹரயே என்று எப்படி ரூபம் தேறுகிறதென்று வியாகரணம் வாசிப்பவர்களைக் கேட்டால் 'ஹரி ஙே என்றிருந்தது' என்று தான் சொல்ல ஆரம்பிக்கவேண்டும். ஹரி என்று ப்ரக்ருதியைச் சொன்னபடி; ஙே என்று ப்ரத்யயத்தைச் சொன்னபடி. இதைக்கேட்ட வீர வைஷ்ணவர்க்கு (படிப்பு முழு மோசமாகையாலே) அளவு கடந்த கோபமுண்டாயிற்று; 'ஹரி ஙே என்றிருந்தது' என்றதற்கு ஹரியானவர் சப்பையாக இருந்தாரென்று சொல்லுவதாக அர்த்தம் கொண்டு, 'அட படுபாவீ! ஹரனுக்குத்தான் சாப்பாடு கிடையாது, அவன் ஙே என்றிருந்தானென்றால் தகும்; எங்கள் ஹரிக்கு என்ன குறைவு? பொங்கலும் புளியோரையும் இட்டிலியும் வடையுமாக அமுது செய்து பம் என்றிருக்கிறார். இவரை நீ (ஙே) என்றிருப்பதாகச் சொல்லுகிறாய்; உன்னை என்ன பண்ணினால் தீரும். அதற்குமேல் குணம் வந்தது என்கிறாய். எங்கள் ஹரி குணமில்லாமலிருந்ததே கிடையாது; அப்படி யிருந்தாலன்றோ குணம் வந்தது என்ன வேணும்; நீ ரொம்ப துஷ்டன், உன்னோடு பேசுவதும் பாபமே. இங்கே நிற்காதே, ஓடிப்போ' என்று விரட்டித் தள்ளினார். உண்மையில் பக்தரும் பண்டிதருமான அவர் தம்பேச்சுக்கு மதிப்பு ஏற்படாத துக்கத்தினால் "அரஸிகேஷு கவித்வ நிவேதநம் சிரஸி மாலிக மாலிக மாலிக" என்று தெய்வத்தை நோக்கிச் சொல்லிக் கொண்டே கோவிலைப் பிரதக்ஷிணம் செய்து நமஸ்காரம் செய்து போனார்.

11. "ஸாப்பிட்டோமையா ஸாப்பிட்டோம்."

ஒரு ஜம்பக்காரன் நாலைந்து நண்பர்களுடன் சிற்றுண்டிச்சாலையில் புகுந்து பத்தெட்டு ரூபாய்க்கு பக்ஷணங்கள் வாங்கியுண்டு காசு கொடாமலே கிளம்பிச்

சென்ஞன். அவனுடைய சொக்காயையும் தலைகுட்டையையும் கண்டு மயங்கி நின்ற அந்த உணவுச் சாலைத்தலைவன் 'வேலைக்காரர்களிடம் காசு கொடுத்திருப்பன்' என்றெண்ணி வாளாவிருந்தான். பிறகு காசு கொடுபடவில்லை யென்றறிந்து ஓடிச் சென்று 'ஐயா! காசு கொடாமலே போகிறீர்களே' என்ஞன். பிறகு நடந்தபேச்சு,

(உண்டவன்) எதற்காகக் காசு? (உணவிட்டவன்) எங்கள் சிற்றுண்டிச் சாலையில் வந்து ஸாப்பிட்டீர்களே, அதற்காகத்தான் காசு. (உண்டவன்) என்ன ஸாப்பிட்டோம்? (உணவிட்டவன்) இட்டிலி, லட்டு, தோசை, வடை, பொங்கல், புளியோரை. (உண்டவன்) ஸாப்பிட்டோமையா ஸாப்பிட்டோம்; அதற்காக என்ன? (உணவிட்டவன்) அதற்குக் காசு கொடுங்கள். (உண்டவன்) காசு எதற்காக? (உணவிட்டவன்) பலஹாரம் ஸாப்பிட்டீர்களே அதற்காக. (உண்டவன்) என்ன பலஹாரம் ஸாப்பிட்டோம். (உணவிட்டவன்) பொங்கல், புளியோரை, லட்டு, இட்டிலி. (உண்டவன்) ஸாப்பிட்டோமையா ஸாப்பிட்டோம். அதற்காக என்ன? என்றுதானே நான் கேட்கிறேன். (உணவிட்டவன்) அதற்காகக் காசு கொடுங்களென்கிறேன். (உண்டவன்) காசு எதற்காக? (உணவிட்டவன்) எங்கள் போஜன சாலையில் வந்து ஸாப்பிட்டீர்களே? அதற்காக. (உண்டவன்) என்ன ஸாப்பிட்டோம். (உணவிட்டவன்) இவையிவை ஸாப்பிடவில்லையா? (உண்டவன்) ஸாப்பிட்டோமையா ஸாப்பிட்டோம். இல்லை யென்று யார் சொன்ஞ? அதற்கென்ன? ஆப்தர்களே! இந்த கதை ஒயுமா வென்று பாருங்கள். ... *

12. "என்னிடம் ஆமாம் ஆமாம்; அவரிடம் அல்ல அல்ல;"

கலியாண முஹூர்த்தத்திற்கு நாளிட்டுத் தரும்படி ஒரு யதாஜாதன் ஒரு புரோஹிதரிடம் வேண்டிக்கொண்டான்; அவர் ஏதோவொரு வருஷத்துப் பஞ்சாங்கத்தைத் தவருகப் பார்த்து 'பங்குனிமீ 14௳ நல்ல நாள்' என்று தெரிவித்தார். அந்த யதாஜாதன் அப்படியே குறிப்பிட்டு உற்ரூருறவினர்க்கு சுப பத்திரிகை அனுப்பிவிட்டான். ஒருவர் கவனித்துப் பார்த்ததில் அந்நாள் க்ருத்திகையும் அமாவாஸ்யையும் சனிக்கிழமையும் மரணயோகமுங் கூடியிருந்தது. உடனே ஓடிவந்து 'இதென்ன, இப்படி விபரீதமான நாளை யார் உமக்கு இட்டுக் கொடுத்தது?' என்று கேட்க, அவன் உண்மையில் திதி வார நக்ஷத்ர நன்மை தீமைகள் ஒன்றுமறியாதவனகையாலே புரோஹிதரிடம் வந்து 'தாங்களிட்டுக் கொடுத்த நாள் நல்லதன்று' என்கிருர்களே யென்ஞன். உடனே புரோஹிதர் பஞ்சாங்கமெடுத்துப் பார்த்தவாறே முன்பு தாம் பார்த்தது வேறொரு வருஷத்தியதென்றும் அநவதாநத்தினுல் தவறிப்போய் விட்டதென்றும் உண்மை தெரிந்து கொண்டார்; ஆனுலும் தமது அசட்டுத்தனத்தை ஒப்புக்கொள்ள மனமில்லாமல் ஒரு சூது செய்யத் தொடங்கினர்; "நல்ல நாளன்று என்று உன்னிடம் சொன்னவரை இங்கு அழைத்துவா, நான் எது கேட்டாலும் அவர் ஆமாம் ஆமாம் என்றே ஒப்புக்கொள்ளும்படி செய்துவிடுகிறேன் பார்" என்று சொல்லிப்போகவிட்டார். உடனே அவரையழைத்துக் கொண்டு வந்தானவன். அவரை நோக்கிப் புரோஹிதர் கேட்கிருர்;—(வினு) பங்குனிமீ 14௳ அமாவாஸ்யைதானே. (விடை) ஆமாம். (வினு) அன்று கிருத்திகைதானே. (விடை) ஆமாம்; (வினு) அன்று சனிக்கிழமைதானே. (விடை) ஆமாம். (வினு) அன்று மரணயோகந்தானே. (விடை) ஆமாம். (வினு) நான் கேட்டால் எதையும் ஆமாம் ஆமாம் என்கிறீர்; இவனிடம் போய் (அல்ல அல்ல) என்கிறீராமே, நியாயமா இது?

இதற்குமேல் அவர்க்கு ஒன்றும் பதில் சொல்லத் தோன்றவில்லை. நம்மால் இவர்க்கு பதில் சொல்லிப் பிழைக்கமுடியாதென்று சிக்கன வெண்ணி ஒன்றும்

சொல்லாமலே போய்விட்டார். விவாதங்களில் ஒன்றுமறியாத மத்யஸ்தர்களை வாய் மாளச் செய்யுமுபாயமிது: .... *

13. "இதுவும் ஒரு நல்ல யுக்திதான்"

ஒருவர்க்குத் தகப்பனர் பரமபதமடைந்து விட்டார். சரம கைங்கர்யத்தை வெகு சிறப்பாக நடத்த வெண்ணின அவர் இரண்டாயிரம் ரூபா செலவு செய்து மிகச் சிறப்பாக நடத்தினர். முடிவில் சுபஸ்வீகாரம் நடப்பது வழக்கமாயிற்றே. அதை அவருடைய மாமனர் விசேஷ வைபவமாக நடத்தி வைத்து நல்ல பட்டுப் பீதாம்பரம் வாங்கி ஓதி யிட்டார். கர்த்தாவானவர், சுபஸ்வீகார கோஷ்டி கலைந்து எழுந்திருக்கும்போது உபாத்யாயருடைய சொற்படி சில பெரியார்களைத் தெண்டனிட்டார். அவரவர்கள் "பிதாவினுடைய சரம கைங்கரியத்தை இவ்வளவு சிரத்தையாகவும் இவ்வளவு விஜ்ரும்பமாகவும் நடத்தினவர்கள் யாருமே கிடையாது; வெகு சிறப்பாக நடத்தினீர்; உமக்கு ஒரு குறைவுமில்லை; எல்லாருக்கும் பரமஸந்தோஷம்" என்று உபசாரமாகக் கூறினர்கள். அது கேட்ட கர்த்தா "உமக்கொரு குறைவுமில்லை யென்று நீங்கள் சொல்லுகிறீர்கள்; என் குறை உங்களுக்கு என்ன தெரியும்? என் மனதில் எவ்வளவோ குறை; இவ்வளவு விபவமாக நடந்த சரம கைங்கைர்யத்தை என் திருத்தகப்பனர் நேரில் பார்த்து ஆனந்தப்பட நான் கொடுத்து வைக்கவில்லையே. நீங்கள் பார்த்து ஆனந்தித்ததில் எனக்கென்ன ஸந்தோஷம்? யாருக்காக நான் இவ்வளவு செலவு செய்து இத்தனை விஜ்ரும்பமாகப் பண்ணினேனே, அந்த தகப்பனர் பார்த்துக் களிக்கக் கொடுத்து வைக்காத பாவியன்றோ நான். இந்தக் குறை எனக்கு எப்படி தீரப் போகிறது என்று சொல்லி விக்கி விக்கி யழுகிருன். இதைக் கண்டவர்கள் 'அப்பா! தகப்பனர் இருந்து இதையெல்லாம் பார்த்து மகிழக் கொடுத்து வைக்கவில்லை யென்று அழுகிருயே, அவர் இருந்தால் இந்த சரம கைங்கரியம் நடத்த எப்படி நேரும்? அஸம்பாவிதமாகச் சொல்லுகிருயே' என்றார்கள். இதைக் கேட்ட கர்த்தா 'ஓகோ நான் உங்களை என்னமோ வென்று பார்த்தேன், நல்ல யுக்தி கண்டு பிடித்துச் சொல்லி விட்டீர்களே; பேஷ் பேஷ்! இதுவும் நல்ல யுக்திதான்' என்றானும். அதற்கு அவர்கள் 'அப்பா! இதில் யுக்தி என்ன இருக்கிறது' என்ன, அதென்ன? அப்படி சொல்லி விட்டீர்களே; தகப்பனர் இருந்தால் அவருக்கு நான் இந்த கைங்கரியம் செய்ய முடியாதென்று நீங்கள் கண்டு பிடித்தது நல்ல ஆணித்தரமான யுக்தியல்லவா? இது எல்லாராலும் கண்டு பிடிக்க முடியுமென்று நினைக்கிறீர்களோ?' என்றானும். .... *

14. "அண்ணா ராதாரமணா!"

மதுரைமாநகரில் ஒரு ஏழைக் குடும்பம். பரம்பரையாகவே கிருஷ்ண பக்தி குடிகொண்ட உயர்ந்த குடும்பம். தந்தையையிழந்து தாயை மாத்திரம் தஞ்சமாகக் கொண்ட ஒரு சிறு குமாரன் செல்வனென்னும் பெயருடையான் வளர்ந்துவருகிருன். ஆறேழு வயது ஆய்விட்டது. இவனுடைய படிப்புக்கு அவ்வூரில் ஒருவிதமான ஸௌகரியமும் இல்லை; ஏனெனில் சம்பளம் கட்டியே வாசிக்கவேண்டியதாக இருந்தது. சாப்பாட்டுக்கே மிகவும் சிரமப்படும் குடும்பமாதலால் சம்பளம்கட்டி வாசிப்பிக்க சக்தியற்றவளாயிருந்தாள் தாய். ஆனாலும் படிப்பிக்க வேண்டியது மிகவும் அவசியமாக இருந்ததனல் அவ்வூர்க்கு மூன்று மைல் தூரத்தில் ஒரு கிராமத்தில் ஒரு பெரியவர் தமது இல்லத்திலேயே பல பிள்ளைகளுக்கு இலவசமாய் [தருமமாக] படிப்பு சொல்லித் தருகிருரென்றறிந்த தாயானவள் குமாரனை அவ்விடம் சென்று படித்துவரும்படி கட்டளையிட்டாள்.

மூன்று மைல்தூரம் போகவேண்டியிருந்தபடியாலும் பயங்கரமான காட்டுப் பாதையாக இருந்தபடியாலும் தன்னோடு கூட அவ்விடம் வாசிக்கவரும் மாணுக்கன் வேறொருவனும் இல்லாதிருந்தபடியாலும் செல்வன் தனியாய்ச் செல்வதற்கு அஞ்சி அநுதினமும் தன்னோடுகூட ஒரு சேவகனைத் துணையாக அனுப்பும்படி தாயை வேண்டினன். அதற்கு அவள் 'அப்பா! சம்பளமில்லாமல் சேவகன் துணைவருவானு? தினமும் உன்னோடு போகவும் வரவும் நாலைந்து ரூபாயாவது மாதச் சம்பளமில்லாமல் ஒருவனும் இசையமாட்டான்; இவ்வூரிலேயே உள்ள பள்ளிக்கூடத்தில் மாதம் ஒரு ரூபாய் சம்பளம் கட்ட முடியாமலன்றோ உன்னை நான் வெளியூருக்குப் போகச் சொல்லுகிறேன்; நாலைந்து ரூபாய்க்கு நான் எங்கே போவேன்? நீ எப்படியாவது தனியாகத்தான் சென்று வாசித்து வரவேண்டும்' என்றாள்.

அப்படியேயென்று தாயை வணங்கி விடைபெற்றுக்கொண்டு புறப்பட்ட செல்வன் சிறிது தூரம் சென்று உடனே திரும்பி வந்து 'அம்மா! வழி கொடிய காடாக இருக்கின்றது; ஆடுகளும் மாடுகளும் தவிர மனிதன் ஒருவனும் தென்படவில்லை; மிகவும் அச்சமாயிருக்கிறதே, நான் எப்படிச் செல்வேன்; என்று அழுது நின்றான். அதற்குத் தாய் சொன்னாள் 'குழந்தாய்! அழாதே, அஞ்சாதே, உன்னுடைய அண்ணன் ராதாரமணன் என்பவன் வழியில் இருக்கிறான்; 'அண்ணா ராதாரமணா' என்று நீ அழைக்கும்போது அவன் தவறாமல் உன்னிடம் வந்து சேருவன். அவ்வூர் எல்லையில் உன்னைக் கொண்டுவிட்டு அவன் திரும்புவான் மறுபடியும் மாலைப்பொழுதில் நீ திரும்பி இவ்விடம் வரும்போது அவ்வண்ணமே அழைத்தாயாகில் வருவான்; அவனைத் துணைகொண்டு போய்வா' என்றாள். இவள் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிடத்தில் திடமான பக்திபூண்டவளாதலால் அந்த பரமாத்மாவையே அண்ணன் ராதாரமணனென்று குறிப்பிட்டாள். ஏழைக்கு இரங்கும் அவன் நம் குழந்தைக்கு அவசியம் துணை புரிவான் என்று நம்பியே குமாரனுக்கு இங்ஙனம் கூறினள்.

தாய் சொற்படியே திரும்பி நடந்த செல்வன் காட்டினருகிற் சென்றவாறே அச்சம் தோன்ற, 'அண்ணா ராதாரமணா!' என்று உரக்க அழைத்தான். உடனே பகவான் ஒரு சிறுவனாக வந்து இவனுக்குத் துணைபுரிந்து அவ்வூரெல்லையிலே கொண்டுசேர்த்து 'தம்பீ! போய்வருகிறேன்' என்று திரும்பி மறைந்தான். செல்வன் வாசித்துவிட்டு மாலைப்பொழுதில் திரும்புகையில் காட்டிடம் வந்தவாறே பழையபடியே 'அண்ணா ராதாரமணா!' என்றழைக்க, முன்போலவே பகவான் வந்து துணை புரிந்தான். இப்படியே தினப்படியாய் நிகழ்ந்து வருகின்றது.

நாலாறு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் உபாத்தியாயர் எல்லா மாணுக்கர்களுக்கும் ஒரு கட்டளையிட்டார்: அதாவது—'நாளது ரேவதீ நக்ஷத்திரத்தில் எனக்கு அறுபதாண்டு நிறைவுவிழா வருகிறது; அதற்காக நீங்களெல்லாரும் உந்தம் சக்திக்குத்தக்கபடி ஏதாவது பரிசு கொண்டு கொடுப்பது நலம் என்றார். ஒவ்வொரு மாணுக்கனும் வேஷ்டியும் சால்வையும் வெள்ளிப்பாத்திரங்களும் ரூபாய்களுமாகக் கொணர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கிறபடியைக்கண்ட செல்வன் தானும் ஏதாவது கொணர்ந்து ஸமர்ப்பித்து உபாத்தியாயரை உகப்பிக்கவேணு மென்றெண்ணித் தன் தாயிடம் செய்தியைச் சொல்லி 'அம்மா! ஏதாவது கொடு' என்று கெஞ்சிக் கேட்டான். உண்மையில் அவளிடம் ஒன்றுமில்லாமையாலே அதை உள்ளபடி சொல்லி, குழந்தாய்! நித்யமும் நீ தனியே போகிறாயா? துணையோடு போகிறாயா? என்று கேட்டாள்; அதற்கு அவன் 'அம்மா! என்னால் தனியாகப் போக முடியுமா? நீ சொன்னபடியே அண்ணன் ராதாரமணனை யழைக்கிறேன், அவன்தான் இரண்டு வேளையும் தவறாது வந்து துணைபுரிகின்றான்' என்று கூறினன். அது கேட்ட

அவள், 'அப்படியா! இன்று போகும்போது அவனையே கேட்டுப்பார்; ஏதாவது கொடுப்பன், அதைக் கொண்டுபோய் உபாத்தியாயரிடம் கொடு' என்றாள்.

அப்படியே செய்கிறேனென்று சொல்லிப் புறப்பட்ட செல்வன் வழக்கப் படியே வழியில் அண்ணனையழைக்க, அவன் வந்து தோன்றினவாறே தனது கோரிக்கையைச் சொல்லிக் கொண்டான். அதுகேட்ட ராதாரமணன் பசும்பால் நிரம்பிய ஒரு சிறு குடுவையைச் செல்வனிடம் கொடுத்து 'செல்வா! இதிலுள்ள பாலை மாத்திரம் உபாத்தியாயருக்கு ஸமர்ப்பித்துவிட்டுக் குடுவையைத் திரும்ப வாங்கி வந்து என்னிடமேகொடு' என்று சொல்லி, துணை வந்து திரும்பிவிட்டான்.

வெறுங்கையோடுபோகாமல் இதுவாவதுகொண்டுபோகப் பெற்றோமேயென்று பெருங்களிப்புக் கொண்ட செல்வன் உபாத்தியாயரிடம் சென்று இதைப் பெற்றுக் கொள்ள வேணுமென்றான். பிறர் பலர் அநவதிகமாகக் கொணர்ந்து கொடுக்கும் சிறந்த பரிசுகளை ஆனந்தமாக வாங்கி வாங்கி வைத்துக் கொண்டிருக்கின்ற அவர் இச்சிறுவன் காட்டும் பால் குடுவையைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. இவனு பதைக்கிறான். பிறகு இச்செல்வனது நிர்ப்பந்தம் பொறுக்கமாட்டாத அவர் ஒரு பரிசாரகனை விளித்து இந்தப் பாலை வாங்கிச் சேர்த்துக் கொண்டு குடுவையைக் கொடுத்துவிடு என்று கட்டளையிட்டார்.

அவன் செல்வனையழைத்துக் கொண்டுபோய் ஒரு பாத்திரத்தில் பாலைக் கொட்டிக்கொண்டு குடுவையைக் கொடுக்கையில் அதில் பால் அப்படியே யிருப்ப தாகக் காண்கிறது. எத்தனை தடவை கொட்டினாலும் பால் அப்படியே காண்கிறது. பல அண்டாக்கள் பாலால் நிரப்பப்பட்டு விட்டன; மேலே பாத்திரமில்லாமையினாலே அவன் மிகவும் வியந்து இவ்வதிசயத்தை உபாத்தியாயரிடம் வந்து தெரிவித்தான். அவரும் கண்டு ஆச்சர்யப்படுகிறார். விஷயம் இன்னதென்று விளங்கவில்லை! 'பையா! இந்தப்பால் எங்கிருந்து கொண்டு வந்தாய்?' என்று செல்வனையே கேட் கிறார். 'என் அண்ணன் ராதாரமணன் கொடுத்தது' என்கிறான். அண்ணனும், ராதாரமணனுமே, யாவன்? என்று விசாரிக்கையில் இவனுக்கு ஸகோதரனே கிடை யாதென்று பலரும் கூறினர். பிறகு செல்வனை விரிவாக விசாரித்ததில், முதலே பிடித்து வரலாற்றைக் கூறினன் செல்வன். 'பகவானே அவன்' என்று தெரிந்து கொண்ட உபாத்தியாயர், அன்று நடைபெறவேண்டிய ஷஷ்டியப்தபூர்த்திக் கொண்டாட்டத்தில் சிறிதும் விருப்பமற்றவராய், அந்த 'அண்ணன் ராதாரமணனை' எப்படியும் காணப்பெற வேணுமென்று ஆவல் கொண்டார். 'செல்வா! உன் அண்ணனை எனக்குக் காட்டுகிறாயா?' என்றார். வழக்கம்போல் அழைத்தால் அண்ணன் வருவானென்று நினைத்து. ஆகா, அவசியம் காட்டுகிறேன் என்றான்.

இருவருமாய்ப் புறப்பட்டு வருகிறார்கள்; வழக்கமான இடத்தில் வந்து அண்ணு ரா்தாரமணு!' என்றழைக்கிறான் செல்வன். அன்று ராதாரமணன் வரவேயில்லை. எத்தனை தடவை கூவியழைத்தும் வந்திலன். செல்வன் இன்று துணையோடு வந் திருப்பதனால் நாம் வந்து துணைபுரியவேண்டிய அவசியமில்லை என்று கருதினன் போலும். பக்தியற்றவரான உபாத்தியாயருக்குக் காட்சி கொடுக்கக் கருதிற்றிலன் போலும். "மஹாபாபியான நான் இருக்கிற வரையில் உன் அண்ணன் வரமாட்டா னப்பா!' என்று சொல்லிப் புலம்பிக்கொண்டே திரும்பினர் உபாத்தியாயர்.

அவர் கண்மறையச் சென்றவாறே வந்து சேர்ந்தான் ராதாரமணன். 'அண்ணு! என் உபாத்தியாயர் உன்னைக் காணவேண்டி வந்தாரே; நீ ஏன் இது வரை வரவேயில்லை? அவர் அழுதுகொண்டே போகிறாரே!' என்று சொல்லி இவனும் அழத்தொடங்கினன். இவனுடைய அபிமானத்தில் இணங்கியவர் என்ற காரணத்தினல் அவர்க்கும் காட்சி தருவோமென் றிரங்கினனெம்பெருமான். அழைத்

துக் காட்சி தந்து, செல்வனையும் வித்தியாநிதியாக அநுக்ரஹித்து மறைந்தனன். இது ஸாதாரணமான வொரு கதையாயிருந்தாலும் இதிலிருந்து பக்தர்கள் அறியக் கூடிய சாஸ்த்ரார்த்தங்கள் பலவுள்ளன. அவற்றை விவேகிகள் உயர்த்துணர வேண்டும். .... *

15. "எவ்வளவும் களவு செய்; எள்ளளவும் புளுகாதே"

யோகிச்ரேஷ்டரென்னும்படியான ஒரு மஹாசாரியர் ஸஞ்சாரக்ரமத்தில் ஒரு மஹாநகரத்திற்கு வந்து சேர்ந்தார். அவருடைய பிரபாவங்களைக் கண்ட பலரும் அவருடைய திருவடி பணிந்து சக்ராங்கனமும் செய்து கொண்டார்கள். நாள் தோறும் பலரும் வந்து பணிகின்றார்கள். அவ்வூரில் மிகவும் தூர்த்தனான ராமஸாமி யென்கிற ஒருவனும் வந்து பணிந்து முத்திரை பெற்றுக்கொண்டான். அவன் சூது களவு பொய் வஞ்சகம் முதலிய தீய குணங்களுக்கு ஆகரமானவன். அவனுடைய இத்தன்மையையறியாத ஆசாரியர் அவனையும் சிஷ்ய கோடியில் சேர்த்துக் கொண்டார்- அவனும் நாள் தவறாமல் ஆசாரியரிடம் வருவதும் தொழுவதும் அந்தரங்க வடிமைகள் செய்வதுமாயிருந்தான். இவனுடைய தீமைகள் ஆசாரியருக்குத் தெரியாதாகிலும் அங்குள்ள மற்றவர்களுக்கெல்லாம் நன்கு தெரியுமாதலால் ஒவ்வொருவரும் ஆசாரியரிடம் வந்து "ஸ்வாமிந்! ராமஸாமியென்கிற பயல் ஸஹவாஸத்திற்கு அடியோடு தகாதவன்; அவனை ஸ்வாமி அருகில் சேர்க்கவேகூடாது" என்று சொல்லி அவனுடைய கெட்ட குணங்களையும் தீய செயல்களையும் விரிவாக எடுத்துக் கூறினார்கள். அதுகேட்ட ஆசாரியர் அவனை எப்படியாவது திருத்திப் பணி கொள்ளத் திருவுள்ளங்கொண்டு, மறுநாள் அவன் வந்தபோது அவனோடு லோகாபி ராமமாகப் பேசிக் கொண்டிருக்கையில் 'உனக்கு என்ன தொழில்? எப்படி ஜீவனம் நடத்துகிறாய்' என்று கேட்டார். அதற்கு அவன் 'எனக்கு பித்ரார்ஜிதமான ஸொத்து விசேஷமாக இருக்கிறது, நிலம் புலம் முதலானவையுமுண்டு; தந்தை தாயர் இல்லை- மனைவி மக்களோடு சுக ஜீவனம் செய்துவருகிறேன்' என்றான். இது முழுவதும் பொய். 'தம்பிடி நாஸ்தி, தடபுடல் ஜாஸ்தி' என்கிற வகுப்பில் சேர்ந்தவன். பொய் பித்தலாடகம் களவு வஞ்சகம் முதலியவைகளினாலேயே ஜீவித்து வருபவன். இதை ஆசாரியர் நன்கு தெரிந்து கொண்டாராதலால் அவனுக்குச் சில ஹிதோபதேசங்கள் பண்ணத் தொடங்கினார். முடிவாக 'பொய் களவு இரண்டையும் விட்டுவிடு' என்றார்: அதற்கு அவன் "ஸ்வாமிந்! இவையிரண்டுமே எனக்கு ஜீவனாதாரம்; இவற்றை விட்டுவிட்டால் நான் ஜீவிப்பதெப்படி?" என்று உண்மையைச் சொல்லி விநயமாகக் கேட்டான்.

அதற்கு ஆசாரியர் "எவ்வளவும் களவு செய், எள்ளளவும் புளுகாதே" என்று சொல்லி, இவ்வுபதேசத்தை நீ திடமாகக் கைப்பற்றினால் உனக்கு ஒரு குறைவும் வராது; மிக்க நலம் பெறுவாய் என்று சொல்லிவிட்டு எழுந்து அனுட்டானத்திற்குப் போய்விட்டார். ராமசாமி அவ்வுபதேசத்தை முழுமனதுடன் நிதியாகக் கொண்டான். களவு புளுகு ஆகிய இரண்டையும் விட்டுவிட வேணுமென்றே மனமார எண்ணினான். ஆனாலும் திடீரென்று களவையும் விட்டு விட்டால் ஜீவிக்க முடியாதே! ஆதலால் மிகப் பெரிய களவு செய்து ஜீவனத்திற்குப் போதுமான பொருள் சேமித்து வைத்துக் கொண்டு பிறகு களவை அறவே விட்டு விடுவோம்; புளுகை இந்த நிமிஷத்திலேயே விட்டுவிடுவோம் என்று உறுதி செய்து கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தான். இனி உயிர் போவதாயிருந்தாலும் பொய் சொல்லுவதில்லையென்று திடவுறுதி கொண்டான். 'இன்றிரவு அரண்மனையில் புகுந்து வெகு தந்திரமாய் சீரிய பொருளைக் களவு செய்து ஜீவனத்திற்கு வைத்துக் கொள்வோம்; இதிலும் பொய் சொல்ல வேண்டிய அவசியம் நேர்ந்தாலும் அது சொல்வதில்லை' என்று திடம் செய்து

கொண்டான். அன்று அமாவாசையாயிருந்தபடியால் 'இன்றிரவே 12 மணிக்கு எழுந்து அரண்மனையில் திருடப் போவது' என்று நிச்சயித்து, முன்னிரவில் நன்றாக வுறங்கி நடுநிசியில் எழுந்து களவு செய்ய ராஜக்ருஹத்தை நோக்கிப் புறப்பட்டான். பல வீதிகளைக் கடந்து ஒரு பெரிய வீதியில் சேல்லலுற்றான். நல்ல கருக்கிருட்டா யிருந்தது. அரசர்கள் இராக் காலங்களில் கறுப்புடுத்துச் சோதித்தல் என்பதொன் றுண்டே; மாறு வேடம் பூண்டு நகரசோதனை செய்வது. அந்த முறையில் அரசன் பிறரறியாதபடி வீதிகளிலே உலாவுமடைவில் ஓரிடத்திலே பதுங்கி நின்றிருந்தான். மெதுவாகச் செல்லுகின்ற இக்கள்ளனைக் கண்டு அணுகிச் சென்று 'யார் நீ? எங்கே போகிறாய்?' என்று வினவினான். இவன் மெய்யே சொல்லுவதென்கிற மனத்திட முடையவனாதலால் தன் பெயரையும் இருப்பிடத்தையும் உள்ளபடி யுரைத்து 'அரண்மனையில் திருடுவதாகப் புறப்பட்டிருக்கிறேன்' என்றான். அதற்கு மாறு வேடப் பிரபு 'அடே! நீ பித்தனா பேயனா? திருடன் திருடப் போகிறேனென்று சொல்லிக்கொண்டு போவது கூட உண்டா? அதிலும் அரண்மனையில் திருடப் போகிறேனென்கிறாயே; இப்படிகூட ஒருவன் சொல்லுவதுண்டா? என்ன சங்கதி? விளையாட்டுத் தனமாகப் பேசுகிறாயா என்ன' என்று கடிந்து கேட்டான். அதற்குக் கள்ளன் அவ்வூரில் ஆசாரியர் வந்திருப்பதையும் அவருடைய உபதேசப் பெருமை களையும் கூறி அவரிடத்தில் தான் செய்து கொடுத்திருக்கிற சபதத்தையும் சொல்லி விளங்கச் செய்தான். பிரபுவுக்கு இவனிடத்தில் நல்ல நம்பிக்கை உண்டாய் விட்டது. ஆனாலும் கொஞ்சம் பரீக்ஷித்துப் பார்ப்போமென்றெண்ணி 'அப்பா! ராமூ! திருடர் களுக்குத் துணையிருந்தால் தானே நல்லது: உனக்கு நான் துணை வருகிறேன்; என்னையும் கூட்டிக் கொள்ளுகிறாயா? எனக்கென்ன கொடுக்கிறாய்? சொல்லு' என்றான். 'நல்லது, அப்படியே துணைவனாகவா; களவில் எனக்குக் கிடைப்பதில் சரிசமமான பாதி உனக்குத் தந்து விடுகிறேன்' என்றான். பிறகு இருவரும் புறப் பட்டு அரண்மனை வாசல் சென்று சேர்ந்தார்கள். மாறுவேடப் பிரபு 'நான் கீழேயே காவல் காத்து உஷார் செய்து கொண்டிருக்கிறேன், நீ மேலே போய்க் காரியம் பார்த்து வருகிறாயா?' என்றான். அப்படியே யென்றிசைந்து வெகு பக்குவமாய் கஜானாவினுட் சேர்ந்து விட்டான். சிப்பாய்கள் துப்பாக்கியும் கையுமாய் நின்ற படியே தூங்குகிறார்கள். உள்ளே போனவன் அரசனுடைய கைப்பெட்டியை எடுத்து ஸதுபாயமாகத் திறந்து பார்க்கையில் அதில் விலையுயர்ந்த மூன்று மாணிக் கங்கள் இருந்தன. ஒவ்வொன்றும் லக்ஷம் ரூபா தாளக் கூடியது. இதை இவன் ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்தவன். ரத்னங்களைக் கண்டவுடனே வெகு சந்தோ ஷம் கொண்டான். அவை மூன்றையும் கவர்ந்தால் 'கீழே யிருக்கிற துணைவனுக்குப் பேர்பாதி கொடுப்பதாகச் சொல்லி யிருப்பதால் மூன்று ரத்னங்களை இருவர் பங்கிட் டுக்கொள்ள முடியாதே' யென்று ஆலோசித்து 'ஒரு ரத்னம் அரசனுக்கே யிருக்கட்டும்' என்று ஒன்றைப் பெட்டியிலேயே வைத்து விட்டு இரண்டை யெடுத்து இடுக்கிக் கொண்டு வேறு எந்த பொருளையும் தொடாமல் மெதுவாகக் கீழே யிறங்கி விட்டான். செய்தியை உள்ளபடியே துணைவனிடம் சொல்லி விட்டான். 'மூன்று ரத்னங்களிருந்தன; மூன்றையு மெடுத்தால் இப்போதே நாம் பங்கிட்டுக் கொள்ள முடியாதே யென்று ஒரு ரத்னத்தைப் பெட்டியிலேயே வைத்து விட்டேன்; இதோ இரண்டு ரத்னம்; ஒன்று எனக்கு, ஒன்று உனக்கு' என்று சொல்லி ஒன்றை அவனுக்குக் கொடுத்துவிட்டுத் தான் போகப் புக்கான். அதைப் பெற்றுக் கொண்ட மாறுவேடப் பிரபு மறுபடியும் அவனுடைய பெயரையும் இருப்பிடத்தையும் கேட் டெழுதிக்கொண்டு படுக்கை யறையில் சேர்ந்து விட்டார்.

நின்று கொண்டே தூங்கிப்போன சிப்பாய்கள் பிறகு கண்விழித்தவாறே கள்ளன் வந்துபோன ஜாடைகள் கண்டு திடுக்கிட்டு அரசன் ரூம் வாசலில் வந்து

மெதுவாக முறையிட்டார்கள். அரசன் அப்படியா? என்று சொல்லி மந்திரியை வரவழைத்து ‘இவர்கள் ஏதோ களவு பேச்சு பேசுகிறார்கள்; என்ன போயிற்று? கவனித்துப் பார்’ என்றான். அங்ஙனம் பார்க்கப்போன மந்திரி அரசனது கைப் பெட்டியைப் பார்க்கையில் அதில் ஒரு ரத்னமிருக்கக் கண்டான். மூன்று ரத்னங் கள் அதிலிருந்தது அவனுக்குத் தெரியும். வந்த கள்ளன் இரண்டு ரத்னங்களைக் கொண்டு போனானென்பது அறிந்துகொண்டான். அந்த ஒன்றை யெடுத்துத் தான் இடுக்கிக்கொண்டு அரசனிடம் வந்து ‘மஹா ப்ரபோ! வெள்ளியோ தங்கமோ ஆடையோ ஆபரணமோ எதுவும் போகவில்லை; கைப்பெட்டியிலிருந்த மூன்று ரத்னங்கள் மட்டுமே களவு போயின’ என்றான். அரசன் கேட்டு ‘மூன்று மா போய்விட்டது? மூன்றுமா போய்விட்டது? நன்றாகப் பார்?’ என்று சொல்லவும், மந்திரி ‘நன்றாகப் பார்த்தேன், மூன்றும் போய் விட்டன; வந்த திருடன் ஒன்றிரண்டை வைத்துப் போவானோ?’ என்று சொல்லித் தானும் துக்கிக்கத் தொடங்கினான். உடனே அரசன் மந்திரியை அவ்விடத்திலேயே உட்காரச் செய்து விட்டு, இரவு களவாட வந்த ராமஸாமியின் விலாஸம் தன்னிடமிருப் பதனால் அந்த விலாஸத்தை ஜவானிடம் சொல்லி உடனே அவனை யழைத்து வா என்று கட்டளை யிட்டனுப்பினான். அவன் ஓடிச்சென்று ராமசாமியை யெழுப்பி ‘மஹாப்ரபு உங்களை யழைக்கிறார்’ என்று கூப்பிட, அதுகேட்ட அவன் ‘ஸரி, நாம் செய்த களவு அரசனுக்குத் தெரிந்துவிட்டதுபோலும்; அதனா லென்ன? ஸத்யம் நம்மைக் காக்குமேயல்லது கைவிடாது’ என்று தைரியங் கொண்டு இரவில் கொணர்ந்த ரத்னத்தையெடுத்து இடுப்பில் மறைத்து வைத்துக் கொண்டு அரசனிடம் வந்து சேர்ந்து தொழுது கை கூப்பினான். ‘நேற்றிரவு என்ன நடந்தது? உள்ளது உள்ளபடியே சொல்லு’ என்றானரசன். இரவு 12 மணிக்குத் தான் வீட்டிலிருந்து புறப்பட்டது முதல் மறுபடியும் வீடுபோய்ச் சேர்ந்த வரையில் நடந்தவற்றை ஒன்று விடாமலும் ஒளிக்காமலும் சொல்லி ‘பிரபுவே! நான் கவர்ந்த ரத்னம் இதோ, மேஜைமேல் வைத்துவிட்டேன்; எனக்குத் துணைவனாய் வந்த வனுக்கு நான் கொடுத்த ரத்னம் என்னால் மீட்டுக் கொடுக்க முடியாததால் தயவு செய்து என்னை மன்னியுங்கள்; அவன் யாரோ? எவ்வூரோ எங்கே போனானோ? எனக்குத் தெரியாது.’ என்று சொல்லிப் பாதத்தில் விழுந்தான். அந்தத் துணை வன் உண்மையில் அரசனே யாதலாலும், அந்த ரத்னம் தன்னிடமேயிருப்பதாலும் அதை யெடுத்து மேஜைமேல் வைத்து ‘மந்திரீ! மூன்றாவது ரத்தினத்தைப் பற்றி இப்போது என்ன சொல்லுகிறாய்?’ என்றான். அப்போதும் மந்திரிக்கு நல்ல புத்தி பிறக்கவில்லை; ‘இந்தக் கள்ளன் பொய் சொல்லுகிறான்; தாங்கள் உத்தரவு கொடுத் தால் இவன் வீட்டில் சென்று சோதனை செய்து அந்த ரத்னத்தைக் கண்டிப்பாய்க் கொண்டு வந்து விடுகிறேன்’ என்றான் மந்திரி. உடனே அரசன் மந்திரியினுடைய ஆடையை அவிழ்க்கச் செய்ய. மூன்றாவது ரத்னம் தொப்பென விழுந்தது. அப்பொழுது மந்திரியின் முகநிலை ‘இப்பொழுதெம் மனோராலியம்புதற் கெளிதோ?’

அரசனுக்கு ராமசாமியிடத்தில் பெருமதிப்பு உண்டாயிற்று; இவன் இனி இவ்வாயுளில் ஸத்யம் தவறமாட்டான்; நல்ல ஜீவிகை கிடைத்தால் களவும் செய்ய மாட்டான்; இவனே மந்திரி பதவிக்கு உரியன்’ என்று துணிந்து பழைய கள்ள மந்திரியைச் சிறைச்சாலைக்கு அனுப்பிவிட்டு ராமஸாமியை ஸர்வாதிகாரி பதவி கொடுத்து மிகமிக ஆதரித்தான். அவன் ஆசாரியனுடைய அருளே இங்ஙனம் பலிக்கப் பெற்றதென்று நன்றியறிவு பூண்டு அவ்வாசார்யனை ராஜகுருவாக்கி இரவும் பகலும் ஸதுபதேசங்களை வளரச் செய்து கிருதயுக தர்மமாக்கி வைத்தான். *

கிடைக்குமிடங்கள் :—

(1) க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

(2) M. A. KRISHNAMMAL, Advocate,
20, South Mada Street, Triplicane, Madras-5.

(3) V. GOPALSWAMI,
17, பண்டி வெங்கடேச நாய்க்கன் தெரு, திருவல்லிக்கேணி.

(4) G. ரங்கைய நாயுடு,
26, குருவப்ப செட்டி தெரு, சிந்தாத்திரிபேட்டை, மதராஸ்—2
(இவர் சென்னையில் பிரசாரம் செய்ய நியமிக்கப்பட்டவர்.)

If un-delivered please return to:

P. B. ANNANGARACHARYA,
L. KANCHEEPURAM.

---

37. Sri S. Anudhachariar,
8, South Mada Street,
Triplicane, MADRAS-5.

Edited and Published by P. B. Annangaracharya Swami
for Madras Satgrantha Prakasana Sabha.
Printed by T. A. P. Srinivasavaradan at Sri Venkateswara Press,
Sannidhi Street, L. Kancheepuram.